Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 ஆனி-08 22-06-2005 புதன்கிழமை ஓசை 124



(சி-12120)

# பொதுக்கட்டமைப்பிற்கான தடைகள் குறித்து சந்திரிகா-ஹெல்கேசன் ஆராய்வு!

## போர்நிறுத்த ஒப்பந்தத்தின் அமுலாக்கம் குறித்து மறுபரிசீலனை

(கொழும்பு)

**இலங்கை சென்றுள்ள நோர்வேயின் பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கேசன் சுனாமி நிவாரண விநியோகத்துக்கான பொதுக்கட்டமைப்பை அமைப்பதில் ஏற்பட்டுள்ள தடைகள் குறித்து ஆராய்வதற்கென நேற்றிரவு சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேசியுள்ளார்.**

இந்தச் சந்திப்பின்போது பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதில் தனக்கு உள்ள அக்கறையை சனாதிபதி வெளிப்படுத்தியதாக சனாதிபதி அலுவலகம் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கை கூறுகிறது.

அதேவேளை, இந்தப் பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம் தரப்பினரும் இடம்பெறவேண்டும் என்று முஸ்லிம்கள் கவலை தெரிவிப்பது குறித்தும் சனாதிபதி விதார் ஹெலகேசனிடம் கூறியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயங்களைத் தான் விடுதலைப்புலிகளிடம் எடுத்துச் செல்வதாக ஹெல்கேசன் கூறியுள்ளார். போர் நிறுத்த ஒப்பந்தத்தின் அமுலாக்கம் குறித்து மறுபரிசீலனை தேவை என்று இருவரும் ஒப்புக்கொண்டதாகவும் கூறப் படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி யின் செயற்குழு நேற்றிரவு கூடி ஆராய்வு

(கொழும்பு)

ஜே.வி.பி யின் மத்திய செயற்குழுக்கூட்டம் நேற்றிரவு நடைபெற்றுள்ளது. இதன்போது நாட்டின் தற்போதைய அரசியல் நிலைப்பாடுகள் மற்றும் ஜே.வி.பி யின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கூட்டத்தின்போது அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் பொதுக் கட்டமைப்பு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக்கொள்ளுமானால் அதற்கு எதிராக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப் பட்டுள்ளது.

அதேசமயம் சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பவற்றின் மாற்றுக் குழுக்களை ஒன்றிணைத்து அரசாங்கத்தைக் கைப்பற்றும் யோசனை ஒன்றும் முன்மொழியப்பட்டதாகவும், எனினும் அதற்கான சாத்தியங்கள் குறைவு என்பதால் அதனைக் கைவிடுவதற்கு கட்சியின் உயர்பீடம் தீர்மானித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (32)

## மன்னம்பிட்டி இராணுவ சோதனைச்சாவடியருகே வாகனங்களை இடைமறித்துக் கொள்ளை!

### நேற்று அதிகாலையில் சம்பவம்

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணம் செய்துகொண்டிருந்த பயணிகளிடம் நேற்று அதிகாலை சுமார் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான ரொக்கப் பணமும் உடமைகளும் மன்னம்பிட்டி இராணுவ சோதனைச் சாவடிக்கு அருகாமையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடி மற்றும் வாழைச்சேனை நோக்கிப் பயணம்செய்து கொண்டிருந்த இரண்டு அல்லது மூன்று பயணிகள் வாகனங்களிலேயே இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.இராணுவச் சீருடையணிந்த இரண்டு ஆயுதபாணிகள் இராணுவ பாணியில் குறிப்பிட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆழிப்பேரலை முகாமைத்துவ கட்டமைப்பு 24 ஆம் திகதியே பாராளுமன்றில் சமர்ப்பிப்பு?

### அரசதரப்புத் தகவல்கள் தெரிவிப்பு

ஆழிப்பேரலை அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பு 24ஆம் திகதியே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அரசாங்க தரப்புத்தகவல்கள் தெரிவித்துள்ளன.

முன்னதாக இன்று ஆழிப்பேரலை அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்புத் தொடர்பில் சமூக சேவைகள் அமைச்சர் விசேட அறிக்கை ஒன்றினை பாராளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றுவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் இதில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் கையொப்பம் இட்ட பின்னரே இதனைப் பாராளுமன்றத்திற்குக் கொண்டு வருவதற்கு சனாதிபதி விரும்புவதாகவும் அதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக்கட்சி ஆகியவற்றின் ஆதரவுடன் இதற்கான அங்கீகாரத்தைப் பெறமுடியும் என்று சனாதிபதி கருதுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வாழைச்சேனை அரசியல்துறை அலுவலகம் மீது கைக்குண்டு வீச்சு; துப்பாக்கித்தாக்குதல்!

### – தாக்குதலில் ஈடுபட்டோருக்கு படையினர் அடைக்கலம்

வாழைச்சேனை விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகம் மீது நேற்று மாலை 6:30மணியளவில் உந்துருளியில் வந்த மூவரால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அலுவலகத்தினுள் கைக்குண்டு வீசப்பட்டு, துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டுள்ளது.

அந்த நேரம் அலுவலகத்தினுள் எவரும் இல்லாத காரணத்தால் இழப்புக்கள் ஏற்படவில்லை. அலுவலக வேலி எரிந்தழிந்துள்ளது.

தாக்குதலை நடத்தியவர்கள் தப்பியோடிய போது அவ்வழியே எதேச்சையாக எதிர்கொண்ட சிறிலங்கா படையினர் அவர்கள் மீது துப்பாக்கிப் பரயோகம் மேற்கொண்டதாகவும் அதில் ஒருவர் காயமடைந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

துப்பாக்கிப் பிரயோகம் செய்து ஒருவர் காயமடைந்த பின்னரே அந்நபர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பை அமுல்படுத்த நேற்றும்அடையாள உண்ணாவிரதம்!

பொதுக்கட்டமைப்பில் தாமதமின்றி கைச்சாத்திட வேண்டும் என்று அரசாங்கத்தைக் கோரி திருகோணமலை மாவட்ட தமிழ்மக்கள் பேரவையின் ஆதரவில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை முதல் மாலை வரை சல்லிவடலியடைப்புப் பிள்ளையார் கோவில் முன்றலில் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் நடைபெற்றது.

பேரவையின் செயலாளர் எஸ்.கௌரிமுகுந்தன் தலைமையில் நடைபெற்ற இவ்வுண்ணாவிரதத்தில் நூற்றுக்கணக்கானோர் பங்குபற்றினார்கள். திருமலை மகளிர்அமைப்பின் தலைவி கண்மணி இரத்தினவடிவேல், ஈழமணி உட்படப் பலர் பங்குப்பற்றிப் பேசினர். முதலாவது ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் திருகோணமலை சிவன்கோயில் வீதியில் (12 ஆம் பக்கம் பார்கக)

## மூதூரில் இனம்தெரியாதோரால் சம்பூர்வாசி சுட்டுக்கொலை!

திருகோணமலை மூதூரில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள சம்பூரைச் சேர்ந்த 38 வயதுடைய சித்திரவேலு சத்தியசீலன் என்பவர் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.இச்சம்பவம் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் சிறிலங்காப்படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மூதூர் நகரில் இடம்பெற்றுள்ளது.

குறிப்பிட்ட நபர் சம்பூரைச் சேர்ந்த இன்னொருவருடன் பொருட்கள் வாங்க உந்துருளியில் பயணித்துக் கொண்டிருந்த வேளை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இச்சம்பவத்தில் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டவர்கள் தமது முகத்தைத் துணியால் மறைத்துக் கட்டியிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.கொல்லப்பட்டவரின் சடலம் தற்போது மூதூர் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.(25)

### தேர்த்திருவிழாவிற்குச் சென்று திரும்பிய

## பயணிகள் பேருந்து கடலினுள் வீழ்ந்தது ஒருவர் பலி; இருபத்தைந்து பேர் படுகாயம்!

(வடமராட்சி)

வரலாற்றுப் புகழ்மிக்க நயினாதீவு துர்க்கை ஆலய தேர்த்திருவிழாவிலிருந்து யாழ். நகரிற்கு வீடு திரும்பிய பக்தர்களுடனான பேருந்து விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இருபத்தைந்து பேர் படுகாய மடைந்துள்ளனர். ஐம்பத்திற்குமதிகமானோர். சிறுகாயங்களிற்குள்ளாகியுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 5.15 மணியளவில் இடம்பெற்ற விபத்தினில் பக்தர்கள் பயணித்த பேருந்து புங்குடுதீவு பாலப் பகுதியினுள் தவறிகடலினுள் வீழ்ந்ததிலேயே இவ் அசம்பாவிதம் ஏற்பட்டது. இப்பேருந்து அளவிற்கதிகமான பக்தர்களுடன், குறித்த பழுதடைந்த பாலப்பகுதியினைக கடக்கமுற்பட்ட வேளையிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

முத்துச்சாமி பிரசன்னா என்பவரது அடையாள அட்டையும், நிரந்தர பயண அனுமதி அட்டையும் திருநகர் பழைய சந்தை வீதிக்கும், சேரன் பணிமனைக்கும் இடையில் தொலைந்துவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது சேரன் நடுவப்பணியகத்தில் ஒப்படைக்கு மாறு வேண்டப்படுகிறீர்கள்.
(6287)

### மணமகள் தேவை

இந்து குடும்பத்தைச் சேர்ந்த தனியார் நிறுவனமொன்றில் பணிபுரியும் 1973 இல் பிறந்த விசாக நட்சத்திரம் 02ஆம் பாதம் உள்ள விவாகரத்துப்பெற்ற மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். முகவரி:- க.சிவானந்தம் க.திருநாவுக்கரசு (சோதிடர்)துர்க்கா வீதி.04ஆம் வட்டாரம். புதுக்குடி யிருப்பு. (சி.12255)

### சான்றிதழ் வழங்கல்

எதிர்வரும் 26-06-2005 அன்று மாலை மூன்று மணிக்கு சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. எனவே 26-06-2005 இற்கு முன்னர் தங்கள் விபரங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.NITM கணனிப் பயிற்சி நிலையம், புதுக்குடியிருப்பு. (6173)


முல்லைத்தீவு மாவட்டத்தில்

# சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 5900 வீடுகள் அமைக்க நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைமாவட்டத்தில் மூன்றாம் கட்ட சுனாமி அபிவிருத்தி வேலைத் திட்டமாக 5900 வீடுகள் அமைக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் சுனாமியினால் ஏற்பட்ட அழிவுகளை மீளத் திருத்தும் அபிவிருத்தி வேலைகளில் மூன்றாம்கட்ட வேலைத்திட்டம் தொடர்பான சிறப்புக் கலந்துரையாடல். கடற் புலிகளின் முல்லைமாவட்ட அரசி யல்துறை செயலக கேட்போர் கூடத் தில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுக்காலை திட்ட அமுலாக்கல் ஒருங்கமைப்புச் செயலணிப் பொறுப்பாளர் மாறன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் முல்லைமாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் அவர்கள் கலந்து கொண்டு முதலாம், இரண்டாம் கட்ட சுனாமி வேலைத்திட்டங்களில் உதவியளித்தவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்ததோடு.மூன்றாம் கட்ட நடவடிக்கை யான நிரந்தரவீடமைப்பதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மேலும் மூன்றாம் கட்ட அபிவிருத்தி தொடர்பான கருத்துக்களை க.வே.பாலகுமாரன், சிரான்பணிப்பாளர் செல்வின், முல்லைமாவட்ட அரசசார்ப்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் சிவனடியார் முல்லை.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் சுனாமித் திட்டமிடல் பகுதிப்பொறுப்பாளர் றஞ்சன் ஆகியோர் வழங்கினார்கள். இக்கலந்துரையாடலில் வெளிநாட்டு உள்ளூர் அரசசார்பற்ற பிரதிநிதிகள் துறைசார் பொறுப்பாளர்கள் உதவி அரசாங்க அதிபர் தலைமைப்பீட அதிகாரி ப.ஆரணி,தமிழர் புனர்வாழ்வுக் கழக முல்லைமாவட்டப் பொறுப்பாளர் மூர்த்தி தமிழர் புனர்வாழ்வுக் கழக சுனாமிகட்டமைப்புப் பொறுப்பாளர் அமுதாப்,தமிழீழ நிர்வாக சேவையின் முல்லைமாவட்டப் பொறுப்பாளர் முரளி, முல்லை மாவட்ட கடற்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் மா.றங்கன் முல்லைமாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுக் சங்க சமாசத்தலைவர் மரியராசா ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர் (20)

## விநாயகபுரம் கிராமத்தில் வருமான அதிகரிப்பு கடன்வழங்கல்

ஆசிய அபிவிருத்திவங்கியின் நிதியுதவியுடன் நிகொட் திட்டத்தின் அனுசரணையுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் நடைமுறைப் படுத்தப்படும் சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் கிராமங்களில் ஒன்றான விநாயகபுரத்தில் வறிய மக்களின் வாழ்கைத்தரத்தை மேம்படுத்தும் வகையிலான வருமான அதிகரிப்புத் திட்டமான கடன் வழங்கல் நிகழ்வானது நேற்று முன்தினம். மாலை 3.00 மணியளவில் விநாயகபுரம் பொதுமண்டபத்தில் சமூக பொருளாதார அபிவிருத்திச் சங்கத்தலைவர் கை.அலெக்சாண்டர் தலைமையில் இந்நிகழ்வு இடம் பெற்றது. இதில் தமிழர் புனர்வாழ் வுக்கழக கிளி. மாவட்ட நிதிமேலாளர் உட்படப் பல பணியாளர்கள் கலந்து கொண்டனர். அதில் 17 பயனாளிக ளுக்கு 72 இலட்சத்து 81 ஆயிரம் ரூபா கடன் வழங்கப்பெற்றது.

## முல்லை அரசாங்க அதிபரின் மாதாந்த கலந்துரையாடல்

முல்லைமாவட்ட அரசாங்க அதிபரின் மாதாந்தக் கலந்துரையாடல்கள் நாளையும் நாளைமறுதினமும் நடைபெறும்மென முல்லைமாவட்ட அரசஅதிபர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் மாவட்ட விவசாயக்குழுக்கூட்டம் நாளை முற்பகல் 9.30 மணிக்கும், அவசர புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத் திட்டக்கூட்டம் முற்பகல் 11.00 மணிக்கும், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் பிற்பகல் 1.30 மணிக்கும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக் கூட்டம் பிற்பகல் 2.30 மணிக்கும், சுற்றாடல் பாதுகாப்புக் குழுக்கூட்டம் பிற்பகல் 3.00 மணிக்கும், நாளைமறுதினம் அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் காலை 9.30 மணிக்கும், உலக உணவுத் திட்டக்கூட்டம் காலை 10.30 மணிக்கும், யு.என்.டி.பி.யின் ஐ.ஆர்.ஆர்.பி திட்டக்கூட்டம் முற்பகல் 11.00 மணிக்கும், யுனி செப்பின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் முற்பகல் 11.30 மணிக்கும் நடைபெறவுள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்துள்ளார். (20)


## சாவு அறிவித்தல்



**பாலசுப்பிரமணியம் ~ சசிகரன்**

இலக்கம் 87/01யூனிற் முரசுமோட்டையை நிரந்தரமுகவரியாகவும், தற்போதைய முகவரியாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் சசிகரன் 21.06.05 நேற்று அகால சாவடைந்துள்ளார். அன்னார் பாலசுப்பிரமணியம் (பூபாலசிங்கம்) இரஜேஸ்வரியின் அன்பு மகனும், செல்வராசா (அமரர்), முத்துப்பிள்ளை (அமரர்), வேலாயுதம் (அமரர்), பாக்கியம் (முரசுமோட்டை) ஆகியோரின் பேரனும்; கமலினி (ஜேர்மனி), ரஜனி, சுசிர்தா, உதயா ஆகியோரின் அன்புச்சகோதரனும், சௌந்தர்ராஜன் (ஜேர்மன்), கணேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், அணாமிகனின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 23.06.2005 நாளை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முரசுமோட்டை ஐயன்கோவிலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், போராளிகள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(6292)



## வட்டுவாகல் சப்த கன்னிமார் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம்

உற்சவ வட்டுவாகல் சப்த கன்னிமார் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல்விழா வழமை போன்று இவ்வருடமும் சிறப்பாக நடைபெறும். 20.06.2005 அன்று தீர்த்தம் அள்ளப்பட்டு, 27.06.2005 அன்று வரை (இறுதி நாள் நிகழ்வு வரை) தீர்த்த விளக்கு எரிக்கப்படுவதுடன் ஏழு நாளும் மதிய பூசை நண்பகல் 12.00 மணிக்கும், இரவுப் பூசை இரவு 7.00 மணிக்கும் இடம்பெறும். அத்துடன், இந்த ஏழுநாளும் வளமை போன்று அன்னதானம் வழங்குதலும் இடம்பெறும்.

இறுதி நாள் நிகழ்வாக 27.06.2005 அன்று பகல் அபிஷேக ஆராதனை நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெறும். அம்பாளுக்கு அர்ச்சனை செய்பவர்கள் எந்நேரமும் செய்யக்கூடியவாறு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. இரவு நிகழ்வுகளாக மடப்பண்டம் எடுத்தல், கச்சு நேருதல், வளந்து நேருதல், பாண்டிவிளையாடுதல் ஊஞ்சலாடுதல், பரியலம் வழிவிடுதல் என்பவற்றுடன், இரவு கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

விசேஷ பூசையாக 27.06.2005 அன்று பகல் சுனாமி அனர்த்தத்தில் பலியான அனைத்து உறவுகளின் சாந்திக்காக விசேஷ பூசைகள், அர்ச்சனைகள் நடைபெறும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

வருடாந்தப் பொங்கல்விழாவிற்காக பல வழிகளிலும் உதவிபுரிந்த அடியார்களிற்கும், அரசதிணைக்களங்கள், இயக்க நிர்வாகங்கள் அனைவருக்கும் ஆலய பரிபாலன சபை சார்பில் நன்றி கூறிக்கொள்கிறோம்.

**வட்டுவாகல், முல்லைத்தீவு.** (சி-12256) **ஆலய பரிபாலன சபை, சப்த கன்னிமார் ஆலயம்.**

## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

### பயணியர் பார்வைக்கு

மக்களின் வேண்டுகைக்கு அமைவாக 25.06.2005 ஆம் நாளிலிருந்து வலைப்பாடு-கிளிநொச்சி பேருந்துப்பணி, பொன்னாவெளி கிராமம் சென்று வரும் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

**நேர ஒழுங்கு**

**வலைப்பாடு - பொன்னாவெளி - கிளிநொச்சி**

| | வலைப்பாடு | கிராஞ்சி | வேரவில் | பொன்னாவெளி | 12ஆம் கட்டை | பள்ளிக்குடா | பூநகரி | தம்பிராய்ச்சந்தி | நல்லூர் | பரந்தன் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை | 06.00 | 06.40 | 06.50 | 07.05 | 07.35 | 08.35 | 08.40 | 08.55 | 09.10 | 09.55 | 10.15 |

**கிளிநொச்சி - பொன்னாவெளி - வலைப்பாடு**

| | கிளிநொச்சி | பரந்தன் | நல்லூர் | தம்பிராய்ச்சந்தி | பூநகரி | பள்ளிக்குடா | 12ஆம் கட்டை | பொன்னாவெளி | வேரவில் | கிராஞ்சி | வலைப்பாடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாலை | 03.30 | 03.50 | 04.35 | 04.50 | 05.05 | 05.10 | 06.10 | 06.40 | 06.55 | 07.05 | 07.45 |

**முகாமையாளர், பேருந்துப்பகுதி, கிளிநொச்சி.**

(சி-12227)

# பின்லேடன் ஒளிந்திருக்கும் இடம் தெரியும்

# அமெரிக்க உளவு அதிகாரி திடுக்கிடும் தகவல்



துருக்கி நாட்டு அரசை கவிழ்க்க சதி செய்ததாக அந்த நாட்டு மதத் தலைவர் மெதினன் கப்லான் என்பவருக்கு ஆயுள் தண்டனை விதித்து இஸ்தான்புல் நீதிமன்று தீர்ப்பு வழங்கியது. நீதிமன்றில் இருந்த அவரைப் பொலிசார் சிறைக்குக்கொண்டு செல்லும் காட்சி. இந்தத்தீர்ப்பை தொடர்ந்து துருக்கி முழுவதும் பாதுகாப்புப் பலப்படுத் தப்பட்டுள்ளது.

(லண்டன்)

**அமெரிக்காவின் உளவுத்துறை உயரதிகாரியொருவர் ஒசாமா பின்லேடன் எங்கு ஒளிந்திருக்கிறார் என்பது தனக்குத்தெரியும் என்று தெரிவித்துள்ளார். ஆயினும் உலகில் தேடப்படும் முக்கியநபரான லேடன் எங்கு இருக்கிறார் எப்போது கைதுசெய்யப்படுவார் என்று அவர் தெரிவிக்கவில்லை.**



பின்லேடன் 2001 செப்ரெம்பர் 11ஆம் திகதி உலக வர்த்தக மையம் மற்றும் அமெரிக்க இராணுவத்தலைமையகத்தின் மீது நடத்திய தாக்குதலையடுத்து தேடப்பட்டுவருகிறார்.


ரைம்ஸ் சஞ்சிகைக்கு அவர் வழங்கிய செவ்வியில் கூறும்போது, பயங்கரவாதத்தைத் தடுக்க அமெரிக்கா எடுக்கும் போர் நடவடிக்கைகளில் தொடர்பாடலில் பலவீனம் இருப்பதாகவும் பாகிஸ்தான் பயங்கரவாதி களுக்குப் புகலிடம் வழங்குவதாகக் கூறப் படுவதும் அதில் ஒன்று என்றும் தெரிவித் துள்ளார்.

அவ்அதிகாரி மேலும் தனது செய் தியில் அமெரிக்கா அனைத்துத் தொடர்பாடல் களையும் ஒன்றிணைக்கும்வரை பின்லேடனைப்பிடித்து நீதிக்கு முன் நிறுத்துவது கடினம் என்றும், உலக நாடுகள் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒப்பந்தத்துக்கு அமைவாகச் செயற்படும் வழிமுறைகளைக்கண்டு பிடிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

கடந்தவாரம் அமெரிக்கத்தூதுவர் ஒருவர் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டபோது பாகிஸ்தான் பயங்கரவாதிகளுக்குப் புகலிடம் வழங்குவதாக தொலைக்காட்சி நேர்காணலில் குறிப்பிட்டுச் சென்ற பின்பு அமெரிக்க புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் மேற்படிகருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் மேற்படி அமெரிக்கத் தூதுவர் ஆப்கானிஸ்தானில் பாதை திறப்பு விழாவில் கலந்துகொள்ளச் சென்றபோது அவர் மீது கிரனைட் தாக்குதல் நடத்தத்திட்டமிட்டதாக சந்தேகிக்கப்பட்ட மூன்று பாகிஸ்தானியர்களை ஆப்கானிஸ்தானிய பாதுகாப்புப் படையினர், கைது செய்துள்ளதாக ஆப்கானிஸ்தான் தொலைக்காட்சி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. சந்தேகநபர்கள் 19,20, 23 வயது இளைஞர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் காபூலிலுள்ள பி.பி.சி செய்தியாளர் இக் குற்றச்சாட்டு எவ்வளவு தூரம் உண்மை என்பதைக் கூறவில்லை.



ஈராக்கில் பாக்தாத்துக்கு 320 கி.மீற்றர் மேற்கே அமைந்துள்ள கறபிலா பிரதேசத்தில் "ஈட்டி" இராணுவ நடவடிக்கையை முடித்துக் கொண்டு முகாம் திரும்பும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அமெரிக்க, ஈராக்கிய துருப்பினர்.

# ஜப்பான் தேசியக்கொடி எரிப்பு

# கொய்சுமிக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(சியோல்)

தென்கொரியாவிலுள்ள ஜப்பானிய தூதரகம் எதிரில், ஆர்ப்பாட்டக்காரர்கள் கூடி, ஜப்பானிய தேசியக் கொடியை எரித்துள்ளனர்.

இரண்டாம் உலகப்போரின் போது கொரியாவை ஜப்பான் கைப்பற்றி அதைத் தன்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. 1910 ஆம் ஆண்டு முதல் 1945 ஆம் ஆண்டு வரை அங்கு ஜப்பானின் ஆட்சிதான் நடந்தது. அப்போது கொரியாவில் ஜப்பான் கொடுங்கோல் ஆட்சி நடத்தியது.

ஜப்பானில் சமீபத்தில் வெளியான வரலாற்றுப்பாடப் புத்தகத்தில், இந்தக் கொடுங்கோல் ஆட்சிபற்றி பூசி மெழுகப்பட்டிருந்தது. அத்தோடு, இரு நாடுகளுக்கும் இடையேயான கடலிலுள்ள தீவுகள் யாருக்குச் சொந்தம் என்பதிலும் பிரச்சினைகள் ஏற்பட்டன. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே கசப்புணர்வு வளர்ந்துவருகிறது.

இதேபோலத்தான் சீனாவுக்கும், ஜப்பானுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டு, அது சீனாவில் ஜப்பான் எதிர்ப்பு கலவரமாக வெடித்தது. ஜப்பான் பிரதமர் கொய்சுமி வரலாற்றுத் தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்டதைத் தொடர்ந்து இரு தரப்பிலும் சமரசம் ஏற்பட்டது.

இதேவேளை தென்கொரியாவுடன் உள்ள உறவை வலுப்படுத்திக் கொள்வதற்காகவும் கசப்புணர்வை மாற்றுவதற்காகவும், ஜப்பான் பிரதமர் கொய்சுமி தென்கொரியா சென்றிருக்கிறார். அங்கு அவர் தென்கொரிய சனாதிபதி ரோக்-மூ-ஹியூன் உடன் பேச்சுவார்த்தை நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது

போர்க்களத்தில் மரணமடைந்த வீரர்களின் கல்லறைக் கோவிலுக்கு (யாசுகுனி கோவில்) ஜப்பான் பிரதமர் கொய்சுமி அடிக்கடி சென்று அஞ்சலி செலுத்துவதும் கொரியர்களை கோபமடையச் செய்துள்ளது.

யாசுகுனி கோவிலுக்கு கொய்சுமி செல்லக்கூடாது என்று தென்கொரியா கூறுவதை கொய்சுமி ஏற்றுக்கொள்ளமாட்டார் என்பதால் இந்தப் பேச்சுவார்த்தையில் பலன் இருக்காது என்று நம்பப்படுகிறது.

இதற்கிடையில் கொய்சுமி தென்கொரியா வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சியோல் நகரிலுள்ள ஜப்பானியத் தூதரகம் எதிரே கொரியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஜப்பானிய தேசியக் கொடிக்கு அவர்கள் தீ வைத்தனர்.


இதைத்தொடர்ந்து, கொய்சுமி தங்கியிருக்கும் விடுதிக்கு 100 பொலிஸ் அதிகாரிகள் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டுள்ளனர். தென்கொரியாவில் நடத்தப்பட்ட ஆய்வில்82சதவீத கொரியர்கள் யாசுகுனி கோவிலுக்கு கொய்சுமி செல்வதைக்கைவிட வேண்டும் என்று கூறியுள்ளனர்.

# லெபனான் பொதுத்தேர்தலில் எதிர்க்கட்சி கூட்டணி வெற்றி

(திகுப்போலி)

லெபனானில் 128 பேரைத் தேர்ந்தெடுப்பதற்காக நடந்த பாராளுமன்றத்தேர்தலில், எதிர்க்கட்சிகளின் கூட்டணி வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம் சிரியா எதிர்ப்பு சக்திகள் முதல் முறையாக ஆட்சியைக்கைப்பற்றியுள்ளன.

சுட்டுக்கொல்லப்பட்ட முன்னாள் பிரதமர் ரபீக் அல்ஹரியின் மகன் சாத் அல்ஹரிரியின் தலைமையிலான கூட்டணி ஆட்சியை கைப்பற்றியது. சிரியா ஆதரவு கிறிஸ்தவ தலைவர் சுலைமான் பிரான் ஜுக் தோல்வியை ஒப்புக்கொண்டார்.



ஈராக்கில் நடந்த குண்டுத்தாக்குதலில் பலியான தனது மகன் லான்ஸ்கோப்ரல் றொபர்ட் தோமஸ் மிரிஞ்சரின் சவப்பெட்டியில் தேசியக் கொடியை வைத்து அஞ்சலிசெய்யும் அவரது தந்தைசார்ஜன்ட் பெரியபேக்கரும்,மகனின் காதலியான எரிக்காலெனிஸ் மற்றும் பலியானவரின் சகோதரனும்.

# தீவிரவாதிகள் மீது விமானத்தாக்குதல் ஆப்கானில் 20பேர் பலி;பலர் தப்பியோட்டம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகள் மீது அமெரிக்க இராணுவம் நடாத்திய விமானத்தாக்குதலில் 20தீவிரவாதிகள் பலியாகியுள்ளனர்.

இத்தாக்குதலில் தப்பிப் பிழைத்த பத்து தீவிரவாதிகள், தலை மறைவாகியதாகவும் அவர்களை அமெரிக்க இராணுவம் தேடிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ரோந்துப்படைகளை கண்டால், தப்பி ஓடி விடும் தீவிரவாதிகள், எதிர்த்து நின்று ரொக்கெட் வீசியதற்குக் காரணம் என்ன என்பதையும் அமெரிக்கா ஆராய்ந்து வருகிறது. முக்கியமான வி.ஐ.பி.யைப் பாதுகாப்பதற்காக அவர்கள் எதிர் தாக்குதல் நடாத்தியிருக்கலாம். என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஏதோ ஒரு காரணத்துக்காக அவர்கள் அந்தப்பகுதியில் அமெரிக்க இராணுவம் நடமாடுவதைத் தவிர்க்க விரும்பியிருக்கிறார்கள். எனவே தான் தப்பிப்பிழைத்த பத்துத் தீவிரவாதிகளைத் தேடிக்கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டு இருக்கிறோம் என்றும் அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.



ஈராக்கில் வீடொன் றை சோத னையிடும் அமெரிக்காவின் டெல்டாகம் பனி 1-184 தரைப் படை வீரர்கள்.

# தீவிரவாதிகள் துணிகரம் 63 கைதிகளை விடுவித்தனர்

நேபாளத்தில் கோட்டாங் மாவட்டத்தில் டிக்டெல் நகரில் நுழைந்த நூற்றுக்கணக்கான தீவிரவாதிகள் அங்குள்ள சிறையை உடைத்து, 63 கைதிகளை விடுவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில், பொலிசாருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே துப்பாக்கிச்சண்டை நடந்தது.இதில் ஐந்துபொலிசாரும் இரண்டு தீவிரவாதிகளும் பலியானார்கள். கைதிகளை தப்பி ஓடவிட்ட பின் தீவிரவாதிகளும் ஓட்டம் பிடித்தனர். கைதிகளாக இருந்த 63 பேரும் தீவிரவாதிகள்தான் எனவும் அவர்களை இராணுவம் தேடிவருவதாக தெரிவிக்கப்படுகிறது.



பலஸ்தீன அதிபர் மக்மூத் அப்பாசும், இஸ்ரேலிய. பிரதமர் ஏரியல் ஷரோனும் விரைவில் இரு நாட்டு பிரச்சினை பற்றிப்பேச்சுநடத்த விருக்கும் நிலையில் 2003 ஆம் ஆண்டு முதலாம் திகதி நடைபெற்ற பேச்சின்போது எடுக்கப்பட்ட படம் இங்கு காணப்படுகிறது.

# ஐரோப்பிய யூனியன் நாடுகள் மீது புதிய போப்பாண்டவர் குற்றச்சாட்டு

ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு பொதுவான அரசியல் சட்டம் பொதுவான பொருளாதாரக்கொள்கை ஆகியவற்றை உருவாக்குவதில் அக்கறை காட்டும் ஐரோப்பிய நாடுகள் ஆக்கத்திலும், ஒழுக்கத்திலும் அதிக அக்கறை காட்டுவதில்லை. மக்கோட்பாடுகளைப் பின்பற்றுவதிலும் கவனம் செலுத்துவதில்லை என்று புதிய போப்பாண்டவர் ஜோசப் பெனடிக்குற்றம் சாட்டியுள்ளார்.

கருக்கலைப்பையும் அவர் கடுமையாக எதிர்த்துள்ளார். கருக்கலைப்புக்குத் தாராளமாக அனுமதிக்கும் வகையில் ஜரோப்பியநாடுகள் சட்டங்களைக் கொண்டு வருவதை அவர் கடுமையாக விமர்சித்துள்ளார்.

குழந்தைகள் கொலைசெய்யப்படுவதை வன்மையாக எதிர்க்கும் விஞ்ஞானிகள் கருநிலையில் இருக்கும் குழந்தைகள் அழிக்கப்படுவதை எதிர்க்காதது ஏன்? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார். கருக்கலைப்பு மனித சமுதாயத்தின் சீரழிவுக்கு வழிவகுத்து விடும் என்றும் அவர் எச்சரித்திருக்கிறார்.

-வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூ. சங்கங்களின் சமாசத்திற்கு-

# ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் ஒரு கோடியே 43 இலட்சம் இழப்பு

(அலுவலக செய்தியாளர்)

**ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் கடந்த வருடம் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு ஒரு கோடியே நாற்பத்திரண்டு இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.**

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும், அதன் கிளை நிலையங்களும் கடந்த வருடம் இடம்பெற்ற ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் முற்றாக அழிவுக்குள்ளானது. இதனால் 14294000 ரூபா பெறுமதியான சொத்திழப்பு ஏற்பட்டுள்ளதாக அச் சமாசம் வெளியிட்ட இழப்பீட்டு அறிக்கை தெரிவிக்கின்றது.

இதன்படி அச் சங்கங்கத்தின் தலைமைச் செயலகத்திற்கு 13 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா சொத்திழப்பும், மொத்த நிலையம் இலக்கம் இரண்டிற்கு மீன்பிடி உபகரணங்கள் வெளிஇணைப்பு இயந்திரங்கள், தளபாடங்கள், கட்டடம் உட்பட 27 இலட்சத்து 23 ஆயிரம் ரூபா பெறுமதியான இழப்பும் கடல் உணவு மொத்தக் கொள்வனவு மையத்திற்கு 29 இலட்சம் ரூபா பெறுமதியான இழப்பும் மாமுனை கிளை நிலையத்திற்கு ஆறு இலட்சத்து 75 ஆயிரம் ரூபா இழப்பும், தாளையடி கிளை நிலையத்திற்கு 4இலட்சத்து 20 ஆயிரம் ரூபா இழப்பும் ஆழியவளை கிளை நிலையத்திற்கு 5 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா இழப்பும் கட்டைக்காடு கிளை நிலையத்திற்கு 2 இலட்சத்து 15 அயிரம் ரூபா இழப்பும் ஏற்பட்டுள்ளன. இவற்றோடு குளிரூட்டி அறை அமைப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட கட்டடப் பொருட்கள் 6 இலட்சத்து 86 ஆயிரம் ரூபா பெறுமதியானவையும், 48 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான வாகனங்களும் அழிவடைந்துள்ளன.


இவ்வாறு பல கோடி ரூபா சொத்துக்களை இழந்த நிலையில் மீன்பிடியை மீண்டும் அபிவிருத்தி செய்வதற்கு எந்த வித வசதி வாய்ப்பும் அற்ற நிலையில் இச் சமாசம் இயங்கி வருகின்றது. (ச.தீ)

## முள்ளியவளை குமுழமுனை வீதி பல வருடங்களாகத் திருத்தப்படவில்லை

முள்ளியவளை குமுழமுனையில் வீதியில்மூன்று கிலோ மீற்றர் பல வருடங்களாக திருத்தப்படாது முற்று முழுதாக சேதமடைந்துள்ளதால் இவ் வீதியினால் போக்குவரத்துச் செய்ய முடியாதுள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ் வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதால் பாதசாரிகள் முதல் வாகனத்தில் செல்வோர் வரை போக்குவரத்தில் பெரும் சிக்கல்களை எதிர் நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் வீதி இன்னமும் திருத்தப்படாமை கண்டு அப்பகுதி மக்கள் கவலையடைந்துள்ளதோடு சம்பந்தப்பட்டவர்கள் இதனைக் கவனத்தில் எடுத்து இவ் வீதியினைப் புனரமைக்குமாறு வேண்டியுள்ளனர். (20)



*கனகபுரம் பொது மண்டபம் கட்டப்பட்டும் கிணறு கட்டி பூர்த்தி செய்யப்படாத நிலையில் நாளை பொதுமண்டபத் திறப்புவிழா வைபவம் இடம் பெறவுள்ளது. கட்டப்படாதுள்ள கிணற்றைப் படத்தில் காணலாம். (படம்:சோதி)*

## போக்குவரத்து விதிமுறை குறித்து கருத்தூட்டல் நிகழ்வு

(உடையார்கட்டு)

போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான முக்கிய கருத்தூட்டல் நிகழ்வொன்று தேராவில் உடையார் கட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. கடந்த சனிக்கிழமை மாலை 3.00மணிக்கு ஆரம்பமான நிகழ்வில் போக்குவரத்து சம்பந்தமான அனைத்து விதிமுறைகள் பற்றியும், சட்ட ஒழுங்குகள் பற்றியும் தமிழீழ காவல்துறையின் புதுக்குடியிருப்பு பிரதேச போக்குவரவுப்பொறுப்பாளர் சி.பிரதீப்குமார் எடுத்துக் கூறினார்.

இந்நிகழ்வில் முல்லைமாவட்ட தமிழர்புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் மூர்த்தி, உடையார்கட்டுப் பிரதேசப் பொறுப்பாளர் புகழரசன், சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனப் பொறுப்பாளர் மற்றும் போராளிகள். பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (08)

## சொந்த இடத்தில் குடியமர்த்துமாறு சன்னார் மக்கள் கோரிக்கை

(மன்னார்)

தம்மைத் தமது சொந்த இடத்தில் மீளக்குடியமர்த்த உதவுமாறு மன்னார் மாவட்டத்திலுள்ள சன்னார் கிராமமக்கள் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்திலுள்ள பள்ளமடு கிராமத்தில் தற்காலிகமாக வசிக்கும் சன்னார் கிராம மக்கள் அடிப்படைத்தேவைகள் எதுவுமின்றி பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள்

யுத்த அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்துள்ள இக் கிராம மக்கள் தமது இடத்தில் குடியேற முடியாது பள்ளமடுப் பகுதியில் தனியார் காணிகளில் தற்காலிக கொட்டகைகளை அமைத்து வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தங்களது சொந்த இடங்களுக்கு செல்வதற்கு அரசஅரச சார்பற்ற நிறுவனங்களை உதவி செய்யுமாறும் தங்களை தமது சொந்த மண்ணில் வாழ வழி செய்யுமாறும் இம்மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (18)

-பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து-

## தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட தமிழர் ஆசிரியர் சங்கம் முடிவு

(திருகோணமலை)

கல்வி அமைச்சில் தனியான தமிழ் மொழிக் கல்விப்பிரிவு ஒன்றைத் தாமதமின்றி உருவாக்க வேண்டும் என்பது உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவது என்று இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆட்சிக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கோரிக்கைகள் குறித்து ஜுலை 25 இற்கு முன்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் ஜுலை 25 இற்குப் பின்னர் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் ஒன்று முதலாவது கட்டமாக மேற்கொள்ளப்படும் என்று சங்கத்தின் ஆட்சிக்குழு முடிவு செய்திருப்பதாக சங்கத்தின் புதிய தலைவர் என்.இராஜநாதன், பொதுச் செயலாளர் த. மகாசிவம் ஆகியோர் தெரிவித்தனர்

வடக்குக் கிழக்குக்கு வெளியே உள்ள தமிழ்மொழி மூலப்பாடசாலைகளில் மேற்பார்வை வேலைகளை மேற்கொள்ளுவதற்காக நியமிக்கப்படும் கல்வி அதிகாரிகள் தமிழ் மொழி தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். அதனை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கல்வி நிர்வாக சேவை ஆளணியில் தமிழ்மொழி மூல நிர்வாகத்தை மேற்கொள்வதற்குத் தேவையான ஆளணி இல்லாதுள்ளது. இவ் வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டும். அதிபர் ஆசிரியர்களுக்குரிய வெற்றிடங்களும் நிரப்பப்பட வேண்டும்.

தமிழ்மொழி மூல பாடநூல்கள் [illegible]ன்றியதாக எழுத்து, இலக்கணப் பிழைகளுடன் அச்சிடப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.இத்தவறுகள் நீக்கப்பட வேண்டும் பாடநூல்களில் தமிழ் மொழியின் நடை தரம் குறைந்ததாக இருப்பது நீக்கப்பட வேண்டும் எனும் கோரிக்கைகளை முன்வைத்தே தொழிற்சங்க நடவடிக்கையில் சங்கம் இறங்கமுடிவு செய்துள்ளதாகத் தலைவரும், செயலாளரும் கூட்டாகத் தெரிவித்தனர். (25)

## வடமராட்சிகிழக்கு கடற்றொழிலாளர்களுக்கு ஆயிரத்திற்கும்மேற்பட்ட படகுத் தொகுதிகள் தேவை

(அலுவலக செய்தியாளர்)

சுனாமி அனர்த்தத்தினால் தொழில் உபகரணங்களை இழந்த வடமராட்சிக்கிழக்கு கடற்றொழிலாளர்களுக்கு இன்னமும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட படகுத்தொகுதிகள் தேவையாக உள்ளதாக வடமராட்சிக் கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.


கடந்த வருடம் ஏற்பட்ட சுனாமிப் பேரலையானது இப்பகுதி கடற்றொழிலாளர்களின் தொழில் உபகரணங்களை முற்றாக அழித்து விட்டது. தற்போது இவர்கள் தொழிலுக்கு செல்ல முடியாதுள்ளனா. இவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் கியூமெடிக்கா நிறுவனமும் படகுத் தொகுதிகளை வழங்கியுள்ளன. ஆனால் இன்னமும் ஆயிரம் வரையான படகுத்தொகுதிகள் கிடைக்கப்பெற்றால் மட்டுமே இப்பகுதி கடற்றொழிலாளர்கள் மீண்டும் முழுமையாக தொழிலில் ஈடபட முடியும் என அப்பகுதி சமாசத்தினர் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு மீன்களை ஏற்றுமதி செய்வதற்கான வாகனங்களும் இல்லாத காரணத்தால் ஏற்றுமதியும் கேள்விக்குறியாகியுள்ளதாக அவர்கள மேலும் தெரிவிக்கின்றனர். (ச,தீ)

## மின் உற்பத்தி முயற்சியில் ஈடுபட்டவருக்கு தமிழர் புனர் வாழ்வுக் கழகம் நிதியுதவி

(முத்துஐயன் கட்டு)

முத்துஐயன்கட்டு குளத்தின் நீர் வீழ்ச்சியைப் பயன்படுத்தி விவசாயி ஒருவர் மின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளதையறிந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் அவருக்கு ஊக்குவிப்பு உதவியாக ஒரு இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கியதோடு ஒரு புதிய துவிச்சக்கரவண்டியையும் கடந்த சனிக்கிழமை வழங்கியுள்ளனர்.




முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முத்துஐயன் கட்டு வலது கரையில் விவசாயம் மற்றும் கூலித் தொழில் புரிந்து வரும் பசுபதி இராதாகிருஷ்ணன் என்பவர் முத்துஐயன் கட்டுக் குளத்திலிருந்து வடிந்து செல்லும் மேலதிக கழிவு நீரைத் தேக்கி அந்த நீர்த்தேக்க அணைக்கட்டில் எட்டு அங்குல விட்டமுள்ள ஒரு பெரிய குழாய் ஒன்றைப் பொருத்தி அந்தக் குழாயிலிருந்து நீரை 15 அடி நீளம் வரை கீழ்நோக்கி விளச்செய்து கனதியான இரும்புத் தகடுகளிலான விசிறியைத் தயாரித்து பொருத்தி அந்த விசிறியின் சிறகுகளில் நீரை விழச் செய்து விசிறியை சுழலவைத்து மின் பிறப்பாக்கியை (டைனமோ) இயங்க வைப்பதன் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றார்.

இதனை அறிந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் அவரது இல்லத்திற்கு சென்று அவரால் மின்சாரம் உற்பத்தி செய்யும் தொழில் முறையினை ஒரு மணி நேரம் நேரில் பார்த்துத் தெரிந்து கொண்டு அவரது முயற்சியைப்ப பா[illegible]தோடு அவரை மென்மேலும் ஊக்குவிக்கும் நோக்கில் நிதியுதவியையும் வழங்கியிருந்தனர். அவற்றைப் பெற்று[illegible] கொண்ட இராதாகிருஷ்ணன் தான் எதிர்பார்த்திருக்காத இந்த ஊக்குவிப்பு உதவியைச் செய்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு தனது நன்றியைத் தெரிவித்துள்ளதோடு தான் எவ்வாறு இந்த முயற்சியில் ஈடுபட வேண்டி வந்தது என்பதையும் விரிவாக எடுத்து விளக்கியுள்ளார்.

### புழுத்தாக்கம்

(ஒட்டுசுட்டான்)

முத்துஐயன் கட்டுப்பகுதியில் சிறுபோக நெற்செய்கையினை மேற்கொண்ட விவசாயிகளின் நெல் வயல்களில் பட்டாளப்புழு/இராணுவப்புழு (அறக்கொட்டியான்) வின் தாக்கம் கண்டறியப்பட்டுள்ளது. எனவே இந்நோயினைக் கண்ட விவசாயிகள் வயல்நிரம்ப நீரைக் கட்டிக் கட்டுப்படுத்துவதுடன், குளோபைறிபொஸ், பென்தியோன் ஆகிய கிருமிநாசினிகளை சிபார்சின் படி விசிறவும். மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ளவிவசாய போதனாசிரியர்களைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். (05)

# தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் நல்லூர் பிரதேசத்தில் இடம்பெயர்சேவை

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினால் மக்களுக்கான நடமாடும் சேவை மூலம் நீண்டகாலமாக தீர்க்கப் பட்டாது இருந்த பல பிரச்சினைகளுக்கு தீர்வுகள் காணப்பட்டுள்ளன.**



கடந்த மூன்றுநாட்களாக திரு நெல்வேலி முத்துத்தம்பி வித்தியா சாலையில் இவ் இடம்பெயர் சேவை இடம்பெற்றது.

இதில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு பயன் அடைந்துள்ளார்கள். முதல் நாளில் காணிகள், தேசிய அடையாள அட் டைகள், பிறப்பு, இறப்புப் பதிவுகள் உட்பட மற்றும் பல செயற்றிட்டங் களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் நாளில் இதன் தொடர்ச் சியாக உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன .

மூன்றாம் நாள் தியாகி திலீபன் மருத்துவமனையின் மருத்துவர் களும் மற்றும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களும் இணைந்து பல்மருத்துவம், கண் சிகிச்சை, பொது மருத்துவம் ஆகிய வற்றை மேற்கொண்டனர்.

இந் நிகழ்வில் தமிழீழ தேசிய எழுச்சிப்பேரவை பொறுப்பாளர் உமைநேசன் யாழ். மாவட்டஅரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, துணைப்பொறுப்பாளர் கண்ணன், பிரதேசப் பொறுப்பாளர்களான செழி யன், பூமகள் மற்றும் தமிழீழ சுகா தார சேவையினர், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் உட்பட மற்றும் துறையினரும் கலந்து கொண்டனர். (41)

# நண்பர்கள் போல் நடித்தவர்கள் கத்தியால் குத்தி விட்டுக் கொள்ளை

(வடமராட்சி)

நண்பர்கள் போல் நடித்து மயக்க இனிப்பு வழங்கியவர்கள் சம்பந்தப் பட்ட நபரை கத்தியால் குத்திவிட்டு ஒரு இலட்சத்து முப்பத்தையாயிரம் ரூபா பணத்தினை கொள்ளையடித் துச் சென்றுள்ளனர்.

பருத்தித்துறையில் உள்ள முதலாம் கட்டையில் வசிக்கும் வியா பாரியான அருளம்பலம் ஜெகதீஸ் வரன் என்பவருக்கே இந் நிலமை ஏற்பட்டுள்ளது. கத்தியால் குத்திய வர்கள் இவரை அருகில் உள்ள பற் றைக்குள் மயக்கமுற்றநிலையில் போட்டுவிட்டுச் சென்றுள்ளார்கள்.

நகை அடைவு எடுப்பதற்கென காலையில் சென்ற இவர் வீடுதிரும் பாததையடுத்து வீட்டார் தேடிய போதிலும் கண்டு பிடிக்க முடிய வில்லை. இரவு 11.00 மணிக்கு இவர் மயக்கம் தெளிந்து வீட்டிற்கு வந் துள்ளார். ஆனாலும் இவர் வீட்டிற்கு வந்தவுடனேயே மயக்க முற்று வீழ்ந் ததினால் மந்திகை மருத்துவமனை யில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார். (41)

# "கலைமலர்" சஞ்சிகை நாளை வெளியிடப்படும்

(அலுவலக செய்தியாளர்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையினரால் வருடந்தோறும் வெளியி டப்படுகின்ற "கலைமலர்" சஞ்சிகை நாளை வெளியிடப்படவுள்ளது.

கலைமலர் ஆசிரியர் ம.பிரபாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வு முற்பகல் 9.30 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது. இதில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவச்சந்திரனும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப் பாளர் இளம்பரிதியும் கலந்து கொள்ளவுள்ளனர். (சு)

# யாழ்.மாவட்டப் பா.உ பத்மினியால் ஒரு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

(தென்மராட்சி)

தென்மராட்சி விளையாட்டுப் பேரவைக்கு ஒரு இலட்சம் ரூபாயினை பாரா ளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் ஒதுக்கியுள்ளார். தென்மராட்சி விளையாட்டுக் கழகங்களின் வளர்ச்சிக்கு இந்த நிதி பயன்படுத்தப்படுவதுடன், இந்த நிதி கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் ஊடாக ஏனைய கழ கங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் எனத்தெரிவிக்கப்படுகிறது. (28)

# 246 கடற்றொழில் குடும்பங்களுக்கு பட்டினிக்கு எதிரான இயக்கம் உதவி

(யாழ்ப்பாணம்)


யாழ்.காரைநகரில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 246 கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு பட்டினிக்கு எதிரான இயக்கம் கடற்றொழில் உபகர ணங்களை வழங்கியுள்ளது.


இவ்உபகரணங்கள் காரைநகரில் சுனாமி ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட நீலங்காடு, கல்வற்தாழ்வு, வியாவில் போன்ற பிரதேச கடற்றொழிலா ளர்களுக்கே வழங்கப்பட்டுள்ளன.

இதில் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா 40 ஆயிரம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் வலைகள், படகு இயந்திரங்கள் மற்றும் கடற்கலங்கள் என்பன அடங்கும். (33)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் நோயாளர்கள் போதிய வசதிகள் இன்மையால் அவதி





(தென்மராட்சி)

ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழும் தென்மராட்சிப் பிரதேசத்தின் நகர மருத்துவமனையாக உள்ள சாவகச்சேரி நகர வைத்தியசாலையில் போதிய வசதிகள் இல்லாமையால் மருத்துவமனைக்கு வரும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை சந்தித்து வருகின்ற னர்.

வெளிநோயாளர்கள் இருந்து சிகிச்சை பெற்று செல் வதற்கான கட்டடவசதிகளோ, இருப்பதற்கான இருக்கை வசதிகளோ இல்லாமையால் நாள்தோறும் இங்கு சிகிச்சை பெறவரும் நூற்றுக்கணக்கான மக்கள் நீண்ட வரிசையில் கால்கடுக்க நிற்பதுடன் மருத்துவமனையின் வெளிபகுதிகளில் உள்ள மரங்களுக்குக் கீழும், தரையிலும் அமர்ந்திருந்து சிகிச்சை பெறவேண்டிய பரிதாப நிலையில் இருக்கின்றனர்.

அரச அதிகாரிகளும், அரசசார்பற்ற நிறுவனங்களைச் சார்ந்தோரும் இவ்விடயத்தில் கூடுதல் கவனம் செலுத் தும்படி பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(28)

# மலசல கூடங்களை அமைத்துக்கொடுக்க ஐ.ஓ.எம். நிறுவனம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்து சென்று இந்தி யாவில் வாழ்ந்து விட்டு மீளக் குடியமரத்திரும்பியுள்ள யாழ். நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களுக்கு புலம் பெயர்ந்தவர்களுக்கான. சர்வதேச அமைப்பு (ஐ.ஓ.எம்) மலசல கூடங் களை அமைத்துக்கொடுக்கவுள்ளது.

இத்தகவலை நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி. தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார்.

அந்த அடிப்படையில் 2003ஆம் ஆண்டுக்குப்பின்பு இந்தியாவிலிருந்து மீளக்குடியமரத்திரும்பியுள்ள நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவைச்சேர்ந்த குடும்பங்களில் மலசலகூட வசதிகள் அற்ற வாழ்விடங்களில் தங்கி யிருக்கும் குடும்பங்களுக்கு ஒவ் வொன்றும் 25 ஆயிரம் ரூபா பெறுமதி யான மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்க புலம்பெயர்ந்தவர்களுக் கான சர்வதேச அமைப்பு முன்வந் துள்ளது என்று நல்லூர்ப் பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்தார். (33)

## தொடர்புகொள்ள கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பி.யசோதா என்னும் பெயரை யும், 6302548 என்னும் சுட்டிலக் கத்தினையும், 0.7616 என்னும் 'Z' கோர் புள்ளியினையும் உடைய கிளிநொச்சி மாவட்ட மாணவிக்கு 2004/2005 ஆம் ஆண்டிற்கான சட்டத்துறை அனுமதி கிடைத் துள்ளது. இதற்கான முடிவுத்திகதி முடிவடைந்துள்ளது. எனவே இவர் தனது கல்வி ஆவணங்களுடன் விரைவாக கலைப்பீட மாணவர் ஒன்றியத்துடன் தொடர்பு கொள்ளு மாறு வேண்டப்படுகின்றார்.

# காவடி உழவு இயந்திரம் கடலில் கவிழ்ந்தது

(யாழ்ப்பாணம்)

உழவு இயந்திரத்தை ஏற்றிச் சென்ற படகு ஒன்று குறிகாட்டுவான் கடலில் மூழ்கியுள்ளது.

இது தொடர்பாக தெரியவருகை யில்; நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் தேர்த்திருவிழா உற் சவத்திற்கு தூக்குக்காவடி எடுப்பதற் காக உழவு இயந்திரம் ஒன்றும், அதற்கான தளபாடங்களும் குறிகாட்டு வான் இறங்குதுறையில் இருந்து ஏற்றிச்செல்ல நடவடிக்கை எடுக்கப் பட்டது.

உழவு இயந்திரம் ஏற்றும் போது படகு அசையாது இருப்பதற்காக கட்டப்பட்டிருந்த கயிறு அவிழ்க்கப் பட்டபோது படகு சரிந்து கடலில் மூழ்கியது.

ஆலயத்திற்குச் செல்வதற்காக கூடியிருந்த மக்கள் படகினை மீட்ட னர். உழவு இயந்திரம் மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்றது.

# நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய்ப் பிரதேச செயலகங்களில் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய பா.செந்தில்நந்தனம் ஆழிப்பேரலை மீள்கட்டுமாணப்பணிகளை முன்னெடுப் பதற்கான மேலதிக மாவட்டச்செயலா ளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# வடமராட்சிப் பகுதியில் எல்லாளன் படையின் சுவரொட்டி

(வடமராட்சி)

சிறிலங்கா அரசினால் ஒலிபரப்படும் உள்ளூர் ஒலிபரப்பு சேவைகளுடன் எந்தவிதமான தொடர்புகளையும் பொதுமக்கள் கொண்டிருக்கக்கூடாதெனவும் மீறி செயற்பட்டால் கடுமையான நடவடிக்கைகளுக்கு உள்ளாக வேண்டி வருமெனவும் எல்லாளன் படை எச்சரிக்கை விடுத்துள்ளது.

"எல்லாளன் படை" எனும் பேரில் ஒட்டப்பட்டுள்ள அநாமதேய சுவரொட்டி களிலேயே இவ் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக யாழ். மாவட்டத் தின் வடமராட்சிப்பகுதியில் பரவலாக ஓட்டப்படுள்ள இச்சுவரொட்டியில் பலாலி இராணுவ முகாமிலிருந்து இலங்கை அரசினால் ஒலிபரப்பப்படும் யாழ். எப்.எம். வானொலி சேவையும், தென்றல் ஒலிபரப்பு சேவையும் திட்டமிட்டு கலாச்சார சீரழிவு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதுடன், இளம் சமூகத்தை தவறான வழியில் வழி நடத்தியும் செல்கின்றன.

கடந்த யுத்த காலப்பகுதியிலும் தற்போதும் விடுதலைப்போராட்டத்திற்கு எதிராக இலங்கை அரசு இவ்வானொலிகளினூடாக பொய்ப்பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகின்றது. குறிப்பாக யாழ் எப்எம் இன் அறிவிப்பாளர்களென கூறப்படும் சிலர் அப்பட்டமாக இளம் சமூகத்தை சீரழிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

அவ்வாறான சத்திகள் இனங்காணப்பட்டு அப்புறப்படுத்தப்படவேண்டும். அதற்கு ஏதுவாக தமிழ் மக்கள் இவ்வாறான வானொலியுடன் தொடர்புகளை கொண்டிருப்பதையோ ,விளம்பரங்கள் வழங்கி ஒத்துழைப்பதையோ தவிர்க்க வேண்டும் எனக்கோரப்பட்டுள்ளது. (கா,27)

# சிவப்புச் சட்டை போட்ட இனவாதிகள்

...யை இன்று எவ்வாறு கூறமுடியும்? இவர்களை யாராவது இடதுசாரிகள் என்று கூறமுடியுமா? அவ்வாறு யாராவது கூறுவார்களேயானால் அவர்கள் ஒன்று இனவாதிகளாக இருத்தல் வேண்டும் அல்லது அவர்கள் போன்றவர்களாக இருத்தல் வேண்டும். ஆனால், ஜே.வி.பி யினர் இன்னமும் சிவப்புச் சட்டையைப போட முனைவதால் அவர்களை சிவப்புச் சட்டைபோட்ட இனவாதிகள் எனக்கூறு தலே முற்றிலும் பொருத்தப்பாடானதாக இருக்கும்.

ஆனால், ஜே.வி.பி யின் முப்பது ஆண்டு காலத்திற்கும் மேலான வரலாற்றில் தற்பொழுது தான் அது இனவாத சிந்தனை கொண்டதாக மாறியிருக்கின்றது என்பதல்ல. ஆரம்பம் முதலே இனவாத சிந்தனை அதன் போக்கில் வெளிப்பட்டதாயினும் சிறிலங்கா பாராளுமன்ற ஆட்சி முறைக்குள்தன்னை இணைத்துக் கொண்டதுடன் முழுமையான இனவாத வடிவத்தை அது கொண்டதாக மாறிவிட்டது, என்றே கூறமுடியும்.

குறிப்பாக, சனாதிபதி சந்திரிகா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட பொ.ஐ. முன்னணியுடன் இசைவானதொரு போக்கைக் கடைப்பிடிக்கத் தொடங்கிய அதேவேளை தீவிர இனவாத சக்தியாகவும் அது தன்னை வெளிப்படுத்தத்தொடங்கியது. இனவாதசக்திகளின் தலைமையைக் கைப்பற்றுவதன் மூலமே சிறிலங்காவில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் அளவிற்கு முன்னேறலாம் என்பது ஜே.வி.பி யின் சிந்தாந்தமாகியது.

இதன் வெளிப்பாடே 2001ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலின்போது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுத்த சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு எதிரான நிலைப்பாட்டை ஜே.வி.பி.யும் எடுத்தது. அதாவது, சமாதானப்பேச்சுவார்த்தை அரசியல் தீர்விற்கு எதிரான நிலைப்பாடு என்பன ஜே.வி.பி.யோ அன்றி வேறு அரசியல் கட்சிகளோ கூறிக்கொள்வது போன்று விடுதலைப்புலிகளுக்கோ அன்றிப் பயங்கரவாதத்திற்கோ எதிரான நிலைப்பாடோ அன்றி இலங்கையின் பிரதேச ஐக்கியம், ஒருமைப்பாடு என்பதற்கு பாதகம் விளையும் என்ற எச்சரிக்கைகளின் பாற்பட்ட முடிவோ அல்ல. முற்றிலுமாக அது இனவாத நிலைப்பாடே ஆகும்.

ஏனெனில், சமாதானப் பேச்சுவார்த்தைகள், அரசியல் தீர்வு என்பன சரிவர இடம் பெறுமானால், அவை இலங்கையின் இறைமை, ஒருமைப்பாடு என்பனவற்றை அனைவரும் ஏற்றுக்கொண்டதாகவே இருக்கும். ஏனெனில், அரசியல் தீர்வு எதுவாகிலும் அதாவது, சமஷ்டியாகவோ அன்றி வேறு உயர்மட்ட அரசியல் தீர்வு எதுவாகவோ இருப்பினும்கூட ஒன்றுபட்ட இலங்கைக்குள் அரசியல்தீர்வு என்ற ரீதியிலேயே பேச்சுவார்த்தைகள் நடைபெற முடியும்.

அதைவிடுத்து, ஜே.வி.பி கூறிக்கொள்வது போன்று இலங்கையின் ஐக்கியத்திற்கும், ஒருமைப்பட்டிற்கும் பேச்சுவார்த்தை பாதகமானதாகிவிடும் எனின், தற்போதைய நிலையில் பேச்சுவார்த்தைகள் நடத்த முடியாது. இன்னுமொரு யுத்தத்தின் பின் தமிழர் தாயகத்தைப் புலிகள் முழு அளவில் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்த பின்னர் நடத்தப்படுவதாகவே இருக்க முடியும். ஆனால், அத்தகையதொரு சூழ்நிலையில் பேச்சுவார்த்தை நடத்துவதானால் அது நிச்சயமாக ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் தீர்வு என்பதாக இருக்கமாட்டாது. இரு நாடுகளுக்கு இடையிலான பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படுவதற்கான பேச்சுவார்த்தையாகவே இருக்க முடியும்.

ஆகையினால், ஜே.வி.பி. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நிலைப்பாட்டிற்கு ஒத்ததாக சமாதானத்திற்கு எதிரான நிலைப்பாடுடன், மறுவளமாக யுத்தத்திற்கு ஆதரவான நிலைப்பாட்டுடன் எதிர்கொண்ட தேர்தலில் சனாதிபதியின் பொ.ஐ. முன்னணியும், ஜே.வி.பி யும் தோல்வியையே தழுவின.

இந்நிலையில், சமாதானத்தையும், தீர்விற்கான பேச்சுவார்த்தையையும் வலியுறுத்தி வந்த ஐ. தே. கட்சி தலைமையிலான ஐ.தே.முன்னணி ஆட்சி அமைத்ததால் விடுதலைப்புலிகளுடன் யுத்த நிறுத்த உடன்பாடு ஒன்றைச் செய்து கொண்டதோடு சமாதானப் பேச்சுவார்த்தைகளையும் ஆரம்பித்தது. ஐ.தே. முன்னணியின் இந்நடவடிக்கைகளுக்கு ஜே.வி.பி யும், சந்திரிகா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தன. இதன் காரணமாக சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு குந்தகம் ஏற்பட்டதோடு, இடைக்கிடை போர்நிறுத்த உடன்பாட்டை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கும் வகையில் நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர்.

இதேவேளை, சனாதிபதி சந்திரிகா கொடுத்த இடையூறுகள் மற்றும் நெருக்கடிகள் காரணமாகச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டன.

ஆயினும், விடுதலைப்புலிகள் முன்வைத்த இடைக்காலத்தன்னாட்சி அதிகார சபை யோசனைகள் ஓராண்டிற்கு மேல் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்கும் சூழ்நிலை தோற்றுவித்தது. அதாவது, விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான நகல் திட்டத்தின் அடிப்படையில் அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தைகளை எதிர்கொள்ளத் தயாரானபோது சனாதிபதியின் விசேட அதிகாரங்களைப் பயன்படுத்தி அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது.

இந்நிலையில், புதிய தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்பாக ஜே.வி.பி க்கும், சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையில் 'புரிந்துணர்வு உடன்பாடு, ஒன்று கைச்சாத்தாகியது. இதன் பிரகாரம் இரு தரப்பும் ஐ.தே. முன்னணிக்கு எதிராக ஒன்று சேர்ந்து தேர்தலைச் சந்திக்கத் தயாராகின.

இத்தகைய சூழலில் நடந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனித்து அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியாது போனாலும் அதிக ஆசனங்களைப் பெற்ற கட்சி என்றாகியது. இந்நிலையில், சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எதிரான கூட்டணியான ஐ.ம.சு. முன்னணி ஆட்சி அதிகாரத்திற்கு வந்தது.

ஆயினும், சர்வதேச அரசியல் சூழ்நிலை, பொருளாதார தங்குநிலை, களயதார்த்தம் என்பன இவர்கள் எதிர்த்த யுத்த நிறுத்த உடன்பாட்டை கைவிடவோ, யுத்தத்தை ஆரம்பிக்கவோ சாதகமாக இருக்கவில்லை. ஆயினும், இனப்பிரச்சினைக்கு விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை என்பது சனாதிபதி சந்திரிகாவால் எதிர்க்கப்பட்டதொன்றாகவே இருந்தது.

இத்தகையதொரு சூழ்நிலையில் கடந்த ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி இலங்கையின் வடக்கு-கிழக்கு மற்றும் தெற்குக் கரையோரங்களைத் தாக்கிய சுனாமி பேரலைகளினால் பெரும் மனித அவலம் ஏற்பட்டது. சுமார் 35,000இற்கும் அதிகமான பேர் இறக்கவும், பெரும் தொகையானோர் காயங்களுக்கும் உள்ளாகினர். மக்களுக்கு ஏற்பட்ட பாரிய நெருக்கடி மற்றும் உடமை இழப்புக்களால் மக்கள் நிர்க்கதியானார்கள். அவர்களுக்கு உண்ணும் உணவில் இருந்து தங்க / உறங்க தங்குமிடங்கள் வரை வழங்கப்பட வேண்டியவையாயின.

இத்தகையதொரு அவலநிலையில் சிறிலங்கா ஆட்சியாளர்கள் வடக்கு-கிழக்கை மாற்றான்தாய் மனப்பான்மையுடனேயே நோக்கினர். நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கையிலும் வழமை போலவே தமிழர் தாயகப் பகுதி புறந்தள்ளப்பட்டது. இது சர்வதேச சமூகத்திற்கும் புரிந்திருந்தது.

இந்நிலையிலேயே சுனாமியினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்பும் புனர்வாழ்வு/புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளவும், கண்காணிக்கவும் என அரசாங்கமும் - புலிகளும் இணைந்ததான பொதுக்கட்டமைப்பு ஒன்று அமைக்கப்படுவதற்கான ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

இதேவேளை, இத்தகையதொரு பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படுதல் சர்வதேச நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியம் என்றாகியது. அதாவது, பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படும் பட்சத்திலேயே சிறிலங்காவிற்கான சர்வதேச உதவிகள் வழங்கப்படும் என்ற நிலை உருவாகியது.

ஆனால், பொதுக்கட்டமைப்பை ஜே.வி.பி. வன்மையாக எதிர்த்தது. சனாதிபதி சந்திரிகாவின் விருப்பு வெறுப்பிற்கு அப்பாற்பட்ட வகையில் பொதுக்கட்டமைப்பிற்கு ஆதரவான நிலைப்பாடு ஒன்று அவசியமானதாக இருக்கையில் ஆட்சியில் பங்கேற்ற ஜே.வி.பி.யோ இதனை தனது அரசியல் மூலதனமாக்கி ஆதாயம் தேட முயன்றது.

இந்நிலையில், பொதுக்கட்டமைப்பை சனாதிபதி சந்திரிகா கைவிடாது போனால் ஆட்சியில் இருந்து வெளியேறப்போவதாக ஜே.வி.பி. மிரட்டியது. இறுதியில் கடந்த 15ஆம் திகதி நள்ளிரவுடன் அரசாங்கத்தை விட்டு வெளியேறுவதாக முன் அறிவித்தல் செய்திருந்த ஜே.வி.பி. அதன் பிரகாரமே ஆளும் கூட்டணியில் இருந்து வெளியேறியது.

ஆனால், தனது வெளியேற்றத்திற்கு ஜே.வி.பி. கூறிக்கொண்ட காரணம் பொருத்தப்பாடானதோ அன்றி ஏற்றுக்கொள்ளத் தக்கதாகவோ இல்லை. அதாவது, பொதுக் கட்டமைப்பு உருவாகினால் அது தனி நாட்டுக் கோரிக்கைக்கு வழி சமைத்து விடும். விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியில் முன்னேற்றம் காண அது உதவியாக இருக்கும் எனக் கூறிக்கொள்வதில் அர்த்தம் எதுவுமே இல்லை.


ஏனெனில், ஏற்கனவே, பொதுக்கட்டமைப்புக் குறித்து வெளியாகிய தகவல்களின் அடிப்படையில் அது ஒரு கண்காணிப்பை மேற்கொள்ளவுள்ளதொரு அமைப்பே ஒழிய அதற்கு அரசியல் ரீதியிலான அதிகாரங்கள் எவையும் இல்லை. சுருக்கமாகக் கூறுவதானால், இப்பொதுக் கட்டமைப்பிற்கும் அதிகாரப்பரவலாக்கலுக்கும் எந்தவிததொடர்பும் இல்லை. இது ஒரு சுனாமி உதவி நிதி பகிர்ந்தளித்தலை கண்காணிப்பதற்கான அமைப்பு மட்டுமே.

ஆயினும், ஜே.வி.பி. இதனை வன்மையாக எதிர்த்தது. இது விடுதலைப் புலிகளுக்குப் பேருதவி அளிப்பதாகிவிடும் எனக் குற்றம் சாட்டியது. ஆனால், ஜே.வி.பி. இதனை இனவாத நோக்கில் மட்டுமே எதிர்த்தது என்பது ஜே.வி.பி யின் பேச்சுக்களில் இருந்தே விளங்கிக் கொள்ள முடியும்.

எடுத்துக்காட்டாக, பொதுகட்டமைப்புக் குறித்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமக்கு தகவல் ஏதும் அளிக்கவில்லை என்பதும், அவர் தான்தோன்றித்தனமாகச் செயற்படுகிறார் என்பதும் இது கூட்டணி ஆட்சிக்கு விரோதமான செயல் என்பதும் ஜே.வி.பி யின் குற்றச்சாட்டுகளில் ஒன்றாகும்.

இதேவேளை, பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுமானால்; அது தமிழீழக் கோரிக்கைக்கு வழி சமைப்பதாக ஆகிவிடும். இராணுவ ரீதியில் விடுதலைப்புலிகளை பலப்படுத்திவிடுவதாகிவிடும் என்பது மற்றுமொரு குற்றச்சாட்டும் ஆகும்.

ஆனால், ஜே.வி.பி யின் இவ்விரு கருத்துக்களில் இருந்துமே ஜே.வி.பி. இவ்விவகாரத்தில் இனவாத சிந்தனை தவிர வேறு எதனையும் மனத்திற்கொள்ளவில்லை என்பது வெளிப்பட்டுவிடும். அதாவது, உத்தியோகபூர்வமாக வழங்கப்படாத ஒரு நகல்திட்டம் இன்றி எவ்வாறு இத்திட்டம் புலிகளால் பலப்படுத்துவதாக ஆகிவிடும்? எவ்வாறு தமிழீழத்திற்கு படிக்கல்லாக முடியும்? என ஜே.வி.பி.யினால் குற்றம் சாட்டுக்கூறமுடியும்.




இதேவேளை, ஜே.வி.பி தர்க்க ரீதியில் நியாயப்படுத்த முடியாத முடிவொன்றை எடுப்பதற்கு தனியாக பொதுக்கட்டமைப்புக்கு எதிரான அதன் செயற்பாடு மட்டும்தான் காரணம் என்று கொள்வதற்கில்லை.

மறுவளமாக இனவாதக் கட்சிகளுக்கிடையிலான தலைமைத்துவப் போட்டியும் முக்கியமான காரணியாகும். அதாவது, ஜாதிக ஹெல உறுமய இனவாதத்திற்கான தலைமைப் பொறுப்பை தட்டிச்சென்றுவிடும் என ஜே.வி.பி க்கு எழுந்த ஐயப்பாடுமே காரணமாகும்.

அதாவது, பொதுக்கட்டமைப்பை எதிர்த்து ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபித்ததேரர் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை தாலதாமாளிகை முன்றலில் ஆரம்பித்தமை ஜே.வி.பி க்கு பேரினவாத சக்திகளுக்குத் தலைமை தங்க தாம் மேற்கொண்ட முயற்சிக்கு சவால் விடுவது போன்றதாகியது. இந்நிலையில், அரசாங்கத்துடன் ஒட்டிக் கொண்டிருப்பதைவிட பேரினவாதத்திற்கு தலைமை தங்குவதே அவசியம் என்ற ரீதியில் அரசில் இருந்து வெளியேறியது.

சுருக்கமாகக் கூறுவதானால், ஜே.வி.பி. ஆட்சியில் பங்குதாரராக இருப்பதைவிட இனவாதசக்திகளின் தலைமைப்பொறுப்பில் இருப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. ஏனெனில் இதுவே எதிர்காலத்தில் தமக்கு ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுத்தருவதற்கான வழியாக இருக்கும் என்பதே அதன் முடிவாக உள்ளது. ஆனால், இது ஒன்றும் புதிய வழிமுறையல்ல. கடந்த காலத்தில் இலங்கையை ஆட்சி செய்த சிங்களக்கட்சிகள் கடைப்பிடித்த வழிமுறையே ஆகும்.

- ஜெயராஜ்

# 13/06/2005-19/06/2005

## கடந்த வாரத்தில்...

**13.**

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாகுமார துங்க எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்கிரம சிங்கவைச்சந்தித்து பொதுக்கட்டமைப்பு தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழக மட்டக் களப்பு அலுவலகம் மீது கைக்குண்டுத்தாக் குதல் மேற்கொள்ளப்பட்டது.

உத்தேசப்பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத்தெரிவித்து கொழும்பு களனி பல் கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆர்ப்பாட் டப்பேரணி ஒன்றை நடத்தியவேளை மாண வர்கள் சிறிலங்காப்பொலிசாரால் விரட்டி யடிப்பு.

பொதுக்கட்டமைப்பிற்கு எதிரான சிங்கள பௌத்த பேரினவாதிகளின் நடவடிக் கைகளைக்கண்டித்தும் அதற்குத்துணை போகும் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா வினைக்கண்டித்தும் யாழ்.பல்கலைக்கழக மாணவர் சமூகம் சவப்பெட்டி ஊர்வல மொன்றை நடத்தியது.



உடையார்கட்டு தேராவில் குளத் தடிப்பகுதியில் இடம் பெற்ற பாரவூர்தி விபத் தில் ஒருவர் பலி; இருவர் காயம்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வெளிவிவகாரக் குழுவினர் கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர் களை சந்தித்துப் பேசினர்.

**14.**

உத்தேசப் பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக மக்கள்விடுதலை முன்னணி (ஜே.வி.பி) கொழும்பில் பேரணியொன்றை நடத்தியது.



வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு நிவாரணப்பணிகளை மேற்கொள்ள நிறுவப்படவுள்ள பொதுக்கட்டமைப்பில் விரைவில் கைச்சாத்திடுமாறு இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் அமைப்பின் கூட்டம் வோஷிங்டனில் இடம் பெற்றவேளை அதில் கலந்து கொண்ட இணைத்தலைவர் கள் வலியுறுத்தியுள்ளனர்.

தமிழீழ காவல்துறைப் பொறுப்பா ளர் பா.நடேசன் அவர்களை நோர்வே ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி பேராசிரியர் ஹாசன் சிமித் அவர்கள் தமிழீழ காவல்துறை நடு வப்பணியகத்தில் சந்தித்து காவல்துறை யின் செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடி னார்.



**15.**

கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக உண்ணா விரதம் இருந்து வந்த தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் தம்பரஅமிலதேரர் உண்ணாவிரத மேடையிலிருந்து பலவந்த மாக அப்புறப்படுத்தப்பட்டார்.

திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் சிறிலங்கா விமா னப்படையின் உலங்குவானூர்தி மூலம் திரு கோணமலை பயணம்.

வவுனியா மதவாச்சி பறையனாலங் குளம் பகுதியில் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இரண்டு பொலிசார் படுகாயம்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசை களுக்கும், சுனாமி அனர்த்த நிவாரணப் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக பௌத்த பிக்குமார்களாலும், சிங்களப்பேரின வாதி களினாலும் மேற்கொள்ளப்பட்டு வரும் தமிழ் இன விரோத நடவடிக்கைகளைக் கண்டித்து யாழ்.சாவகச்சேரியில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது.

கல்முனையில் தனியார் சிற்றூர்தி மையத்தில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் பலி.

மட்டக்களப்பு மாவட்டம் ஆரையம் பதி முருகன் கோவிலடியில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் ஒருவர் பலி.

ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறு வனத்தின் 2005 ஆம் ஆண்டிற்கான உப்பு அறுவடை விழா குறிஞ்சாத்தீவு உப்பு உற் பத்தி நிறுவனத்தில் இடம்பெற்றது.



மன்னார் நலன்புரி நிலையத்திலிருந்த மக்கள் தமது சொந்த இடமான கிளிநொச் சிக்கு வருகை தந்தபோது உயிலங்குளம் இராணுவச் சோதனைச் சாவடியில் கடமையி லிருந்த இராணுவத்தினர் அவர்களை ஏழு மணி நேரம் தடுத்து நிறுத்தி சோதனை மேற் கொண்டனர்.

**16.**

சிறிலங்கா அரசினதும், பிக்குகளின தும் இனவாத பயங்கரவாதச் செயற்பாடு களைக் கண்டித்து இரண்டாவது நாளாக கைதடிச் சந்தியில் மாபெரும் உண்ணா விரதத்தினை தென்மராட்சி வணிகர் சங்கங் களின் ஒன்றியம் மேற்கொண்டது.



பொதுக்கட்மைப்புத் தொடர்பாக ஜே.வி.பியின் கோ.ரிக்கையை அரசு ஏற்காத தையடுத்து ஜே.வி.பி ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியிலிருந்து விலகியதாக அறிவிப்பு.

விடுதலைப்புலிகளின் பாண்டிருப்புப் பிரதேச அரசியல்துறை அலுவலகம் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இரு போராளிகள் காயம்.

சுகயீனம் காரணமாக நாட்டுப்பற்றாளர் களான சிவகாந்தன், கணேசமூர்த்தி ஆகி யோர் சாவடைந்தனர்.

**17**

பொதுக்கட்டமைப்பு அமுல் செய் யப்படவேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்து யாழ்.தென்மராட்சியில் தொடர்ச் சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் போராட் டங்களின் மூன்றாவது நாளாக கொடிகாமம் பகுதியில் உண்ணாவிரதப் போராட்டமும் கண்டனக் கூட்டமும் இடம் பெற்றது.

திருகோணமலை சேருநுவர பகுதி யில் வைத்து சிறிலங்கா புலனாய்வுத்துறை அதிகாரி இனந்தெரியாதோரால் சுட்டுக் கொலை.

மட்டு.அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல்.பானு, மட்டு.அம்பாறை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் இளந் திரையன் ஆகியோர் அடங்கிய குழு மட்டக் களப்பு பயணம்.



மட்டக்களப்பு கல்லடி கடற்கரைக்கு அருகில் புளொட் உறுப்பினர்கள் பயணம் செய்த உழவு இயந்திரம் மீது இனந்'தெரி யாத நபர்கள் மேற்கொண்ட தாக்குதலில் புளொட் உறுப்பினர் ஒருவரும் சிறிலங்கா பொலிஸ்கான்ஸ்டபிள் ஒருவரும் காயமடைந் தனர்.

திருகோணமலையில் அமைக்கப் பட்டுள்ள சட்டவிரோத புத்தர்சிலையை அகற்றவேண்டுமென்ற திருமலை நீதவான் நீதிமன்றத்தீர்ப்புக்கு கொழும்பிலுள்ள மேற் முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடை யுத்தரவை பிறப்பித்தது.

பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு தெரிவித்தும் சமாதானத்தை வலியுறுத்தியும் புத்தளம் நகரில் பெரும் ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எம்.பிக் கள் குழு கொழும்பில் நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கரை சந்தித்து பொதுக்கட்ட மைப்பு உடன்பாடு ஏற்படுவதிலுள்ள தடங்கல் கள் குறித்து விரிவாக ஆராய்ந்தனர்.

கடல்கோள் அனர்த்த நிவாரணப்பணி களுக்காக அரசும் புலிகளும் இணைந்து அமைக்க திட்டமிட்டுள்ள உத்தேச பொதுக் கட்டமைப்பு குறித்து பௌத்த பிக்குமாருக்கு விளக்கமளிக்கும் மாநாடு கொழும்பில் இடம் பெற்றது.



**18**

இருபது வருட காலப் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன்களில் தீவிர கவனம் எடுத்து அதற்குரிய வேலைத் திட்டங்கள் விடுதலைப்புலிகளினால் முன் னெடுத்து வருவதுகுறித்து சு.ப.தமிழ்ச் செல்வன் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத் தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான அன் வெனிமின்னுக்கு விளக்கம்.



திருகோணமலை மாவட்ட சேரு நுவர மற்றும் அலிஒலுவப்பகுதிகளில் தமிழ் மக்கள் மீது சிங்களக்காடையர்களால் தாக்குதல் நடத்தப்பட்டது. இதன்போது தமி ழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பாரவூர்தி தீயிட்டு எரிக்கப்பட்டதுடன், கண்காணிப்புக் குழுவின் வாகனமும் தாக்கப்பட்டது.

மன்னார் அரசியல்துறை செயலகம் மீது தேசவிரோதிகளினால் கைக்குண்டுத் தாக்குதலும், துப்பாக்கிச்சூடும் நடத்தப் பட்டது.

வன்னி வந்த நோர்வேயின் உள் நாட்டு அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகளை தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி சந்தித்து கலந் துரையாடியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தை பார்வையிட்டார்.



தமிழ் நாட்டிலுள்ள இலங்கை அகதி முகாம்களில் பொலிசார் அதிரடி சோதனை.

**19.**

பௌத்த சிங்கள பேரினவாதத் துக்கு எதிரான " தமிழ்த்தேசியத்தின் குரல்" என்ற எழுச்சி நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெற்றது.



"பௌத்த சிங்கள பேரினவாத குரூ ரத்தை தமிழ் மக்கள் ஒன்றிணைந்து தோற் கடித்து ஆக்கிரமிப்பு படைகளிடமிருந்து எமது பாரம்பரிய வாழ்விடங்களை விடு வித்து எங்கள் நிலத்தில் எங்கள் பலத்தில் எங்கள் சுயத்தை நாமே நிர்ணயிப்போம்" என்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற "தமிழ்த்தேசியத் தின் குரல்" எழுச்சி நிகழ்வில் பிரகடனம்.

முஸ்லிம் மக்களின் எதிர்காலம் குறித்து எமது தலைமை அதிக அக்கறை கொண்டுள்ளதென யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் யாழில் முஸ்லிம் களுடனான ஒன்றுகூடலில் கலந்து கொண்டு தெரிவிப்பு.

வவுனியாவில் புளொட் தேசவிரோ தக்குழுவின் சிரேஷ்ட உறுப்பினர் இனந் தெரியாதோரால் சுட்டுக்கொலை.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பிரதி நிதிகளுக்கும், ஐக்கிய தேசிய கட்சித்தலை வர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையி லான சந்திப்பொன்று கொழும்பில்இடம் பெற்றது.

மேல்மாகாண சபையின் தலைமை அமைச்சர் ரெஜினோல்ட் கூரே இராஜி னாமா.

# அத்துரலியேரத்னதேரரின் நடவடிக்கைக்காக அவருக்கு "சரசவிய" விருதுதான் வழங்க வேண்டும்

## -சிறிலங்கா நிதியமைச்சர் கேலி

அத்துரலியேரத்னதேரரின் நடவடிக்கைகளுக்காக அவருக்கு சரசவிய விருதுதான் கொடுக்கப்பட வேண்டும். தென்னிலங்கையில் உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்தும் பௌத்த பிக்குகள் யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்துவதற்கு தைரியம் இருக்கின்றதா? என்று சிறிலங்கா நிதியமைச்சர் சரத் அமுனுகம கேள்வி எழுப்பியுள்ளார்.

நீர்கொழும்பில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் சரத்அமுனுகம பேசியபோதே இக் கேள்வியை எழுப்பினார்.

சிறிலங்கா மிகச்சிறிய நாடு. ஜே.ஆர். ராஜீவ் உடன்பாடு ஏற்பட்டபோது சிறிலங்காவில் இந்தியத் தலையீடு அதிகம் இருந்தது. அப்போது இந்த ஜாதிக ஹெலஉறுமய எங்கே போனது? அவர்கள் நாட்டுக்கு இம்மியளவும் சேவையாற்றுகிறவர்கள் அல்ல.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேச நாடுகள் பெருமளவான நிதியுதவியை அளித்துள்ளன. இதனால் அகலக் கண்கொண்டு சிறிலங்காவை அந்த நாடுகள் அவதானித்து வருகின்றன.

ஒருவேளை சிறிலங்காவிற்குள் பன்நாட்டுப் படைநுழைந்தால் பிடிவாதம் கொண்ட இந்த இடதுசாரிகள் அந்தப் படையை எதிர்கொண்டு போராடுவார்களா?

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் கிணறுகள், பாடசாலைகள், வீதிகளை சீரமைத்துக் கொடுப்பதை நாம் எதிர்த்தால் அவர்கள் சிறிலங்கா அரசு மீது எப்படி நம்பிக்கை கொள்வார்கள்?

கொழும்பில் ஆர்ப்பாட்டங்களையும், உண்ணாவிரதப் போராட்டங்களையும் நடத்தும் பௌத்த பிக்குகளே! உங்களுக்கு நாங்கள் முழுமையான பாதுகாப்பு அளிக்கின்றோம். உங்களுக்குத் துணிவிருந்தால் யாழ்ப்பாணத்தில் போய் இந்த உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்துங்கள். இவர்கள் அநுராதபுரத்தைத் தாண்டிச் செல்ல அச்சப்படுபவர்கள்.

பொதுக்கட்டமைப்பு என்பது கடற்கரையிலிருந்து இரண்டு கிலோமீற்றர் பகுதியில் மேற்கொள்ளப்படுகின்ற மீளமைப்பு நடவடிக்கையே. ஆளும் மக்கள் ஐக்கிய முன்னணி அரசு குறித்து எவரும் அச்சப்படத் தேவையில்லை.

பொதுக்கட்டமைப்பை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யவும் அதைச் செயற்படுத்தவும் அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருகின்றது. எமது ஆட்சிக்காலத்தில் 40 ஆயிரம் பட்டதாரி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கியிருக்கின்றோம். கடந்த ஆட்சிக்காலங்களில் அவர்கள் வேலை வாய்ப்புக் கேட்டபோது சிறையில் அடைக்கப்பட்டாகள்.

பௌத்தபிக்குகள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டால் சர்வதேச நிதியுதவி நமக்குக் கிடைக்காது. அத்துடன் நாட்டில் மத, இன மோதல்கள பாரியளவில் வெடிக்கும் என்று சரத் அமுனுகம எச்சரித்தார்.

# பதவியிலிருந்து சந்திரிகாவை நீக்கவேண்டும்; தீவிர பரப்புரைக்கு ஜாதிகஹெலஉறுமய ஏற்பாடு!

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை பதவியிலிருந்து நீக்க வலியுறுத்தும் தீவிரப் பரப்புரை நடவடிக்கையை ஜாதிகஹெல உறுமய மேற்கொள்ளவுள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் முக்கிய உறுப்பினரான உதயகம்மன்பில இது குறித்து கூறியுள்ளதாவது; நுகெகொடவில் நாளை இந்தப் பரப்புரைப் பயணம் தொடங்கும்.

சனாதிபதி ஆளுமையற்றவராக இருக்கிறார். நாட்டின் பல பிரச்சினைகளுக்கு அவரே அடிப்படைக்காரணம். பிலிப்பைன்ஸ் சனாதிபதி பெர்டினாண்ட் மார்கோசை அதிகாரத்திலிருந்து மக்கள் தூக்கியெறிந்தது. போன்ற பரப்புரை பயணத்தை நாம் மேற்கொள்ளப்போகின்றோம். அவர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வாக்கு வங்கிகளைப்பற்றி கவலைப்படுபவராக இல்லை. அவர் அரசியலிலிருந்து விலகப்போகிறார்.

அமெரிக்க முன்னாள் சனாதிபதி பில் கிளிங்டனைப் போல் சர்வதேசப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்தும் நபராகவே இருக்க விரும்புகிறார்.

ஐம்பது ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டது குறித்தெல்லாம் சனாதிபதிக்கு அக்கறை இல்லை. அவர் தனது சொந்த வழியிலேயே செல்ல விரும்புகிறா என்று கூறிய அவர் சனாதிபதியை நீக்குவதற்கான அடுத்த கட்ட அரசியல் செயற்திட்டங்கள் குறித்து தெரிவிக்க மறுத்துவிட்டார்.

# பொதுக்கட்டமைப்பு உருவாக்காவிட்டால் இரணைமடு ஊடாக சர்வதேசம் புலிகளுக்கு உதவும்

## பிரதியமைச்சர் ஜயரத்னஹேரத் தெரிவிப்பு

பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படாவிட்டால் இரணைமடு ஊடாக சர்வதேச சமூகம் தமிழீழவிடுதலைப் புலிகளுக்கு உதவும் நிலை உருவாகலாம் என்று பிரதியமைச்சர் ஜயரத்ன ஹேரத் தெரிவித்தார். ஜே.வி.பி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து விலகுவதற்கு பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் காரணமல்ல. மாறாக அக்கட்சிக்கு தனியான அரசியல் ஒழுங்குப்பத்திரம் உள்ளமையே காரணமாகும். பொதுக் கட்டமைப்பு இன்னும் இறுதி வடிவம் பெறவில்லை. அது குறித்து விரிவான கலந்துரையாடல்களை சனாதிபதி அரசியல்கட்சிகள் மற்றும் சிவில் சமூகத்துடன் நடத்திவருகிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

புத்தளம் தேர்தல் தொகுதியைச் சேர்ந்த சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகளுக்குப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டம் புத்தளம் மாவட்டச் செயலகத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. புத்தளம் தொகுதி சிறிலங்கா சு.க அமைப்பாளர் எம்.எச்.எம் நவவி தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதியமைச்சர் மேலும் கூறுகையில்: சுனாமியால் பாதிக்கப்பட்ட வடகிழக்கு மீள்கட்டுமானப் பணிகளை நிறைவேற்ற பலமிக்க நிர்வாக இயந் திரம் இன்மையின் காரணமாகவே பொதுக் கட்டமைப்பை உருவாக்கி மனிதாபிமான உதவிகள் வழங்க அரசு முடிவு செய்தது. வடகிழக்கில் எதைச் செய்யவேண்டும் என்பதை அங்கு வாழும மக்களே நன்கு அறிவார். எனவே தான் புலிகளுடன் இணைந்து இக்கட்டமைப்பை உருவாக்க அரசு முனைகிறது இதைச் செய்யாது விட்டால் தான் நாடு பிளவுபடலாம் என மேலும் அவர் தெரிவித்தார்.


**விற்பனைக்கு**

*நல்லின தென்னை நாற்று விற்பனைக்கு எம்மிடம் உண்டு. விலை ரூபா. 35/- மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.*

*தொலைபேசி இலக்கம்: 0777-238422*

(சி.12224)

**பொதுமுகாமையாளர்,**
**பூ.ப.நோ.கூ. சங்கம்**

**பகிரங்க ஏல விற்பனை**

பின்வரும் வாகன உதிரிப்பாகங்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

**காலம்:-** 24-06-2005ஆம் திகதி காலை 10.30 மணி

**இடம்:-** பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வாடியடி, பூநகரி.

1. லேலண்ட் பாரவூர்தி பாவிக்கப்பட்ட கௌசிங் செற் -01
2. லேலண்ட் பாரவூர்தி பாவிக்கப்பட்ட பின் வில்லுத்தகட்டுசெற்-02
3. இருசில்லு உழவியந்திர அச்சு செற்-01 (ரயர்,ரியூப் உட்பட)
4. லேலண்ட் பாரவூர்தி பாவித்த றிம்-02

கூட்டுறவுச் சேவையிலுள்ள,
**கா. கார்த்திகேசு,**
தலைவர்,
பூநகரி பல நோ. கூ. சங்கம்,
வாடியடி.

(சி-12225)

**பணிநிலை வேண்டுகை**

**தமிழீழ நிர்வாக சேவை**
**தமிழீழம்**

தமிழீழ நிர்வாக சேவையின் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு ஆளணி சேர்த்துக் கொள்ளப்படவிருப்பதனால் கீழ்காணும் தகைமை உடையவர்கள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**கல்வித் தகைமை:-**

க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் தமிழ் பாடத்தில் திறமைச் சித்தியுடன், கணித பாடம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந் திருத்தல்வேண்டும்.

**குறிப்பு:-**

கூட்டுறவுப்பயிற்சி நெறி, நிலஅளவையியல் பாடநெறி, கணக்கியல் சார்ந்த பாடநெறி, திணைக்களம்/நிறுவனங்களில் பணிபுரிந்தமைக்கான சான்றிதழ்கள் இருப்பின் முன்னுரிமை அளிக்கப்படும்.

**வயதெல்லை:-**

20 தொடக்கம் 30 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்

**சம்பளம்:-**

சகல பணிநிலைகளிற்கும் அவரவர் கல்வித்தகைமைகளுக்கும், அனுபவத்திற்கு ஏற்ப நேரில்பேசி தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் சுயமாக தயாரிக்கப்பட்டு கல்வித்தகைமையின் நிழற்பிரதியுடன் 30.06.2005இற்கு முன் கிடைக்கக்கூடியவாறு கீழ் காணும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

முகவரி☞

**ஆளணிப்பகுதி,**
**தமிழீழ நிர்வாக சேவை,**
**நடுவப்பணியகம்,**
**155ஆம் கட்டை,**
**பாரதிபுரம்,**
**கிளிநொச்சி.**

(சி-12219)

MEDECINS DU MONDE

**MDM** French NGO working on rehabilitation program on Mallavi Hospital is looking for two drivers for the association

-Experience needed in driving and car maintenance
-Familiar with the Vanni and crossing of the border in Vavunia
-Knowledge needed in English or English and Singhalese

Job available immediately, one month trial period followed by a signed contract with monthly salary.
If interested please send contact address along with CV/references to MDM (Medecins dumonde). Mallavi

(5939)

# இந்தியாவை தாக்க அணு ஏவுகணை; கார்கில் போருக்கு பாக்.தயாரித்தது

## புதிய தகவல் வெளியானது

(இஸ்லாமாபாத்)

**கார்கில் போரின்போது இந்தியாவைத் தாக்க அணுவாயுதம் பொருத்திய ஏவுகணையைப் பாகிஸ்தான் இராணுவம் தயாரித்ததாக திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது.**

பாகிஸ்தான் பிரபல எழுத்தாளர் உசேன்ஹக்கானி "மசூதிக்கும் இராணுவத்திற்கும் இடையே பாகிஸ்தான்" என்ற புத்தகத்தை எழுதியுள்ளார். அமெரிக்காவில் இப்புத்தகம் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

கார்கில் போரின்போது அமெரிக்காவின் அப்போதைய அதிபர் பில்கிளிங்டனும், பாகிஸ்தானின் அப்போதைய பிரதமர் நவாஷ்ஷெரீப்பும் வோஷிங்டனில் நடத்திய பேச்சின் விபரம் புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கார்கில் சண்டையில் இந்தியாவைத் தாக்க அணுவாயுதம் பொருத்திய ஏவுகணையை உங்கள் நாட்டு இராணுவம் தயாரித்துக்கொண்டிருப்பது உங்களுக்குத் தெரியுமா? என்று சந்திப்பின்போது ஷெரீப்பிடம் கிளிங்டன் கேட்டுள்ளார். அதைக் கேட்டதும் திடுக்கிட்ட ஷெரீப் இந்தியா அப்படி செய்துகொண்டிருக்கலாம் என்று திணறலுடன் பதிலளித்துள்ளார்.

அதற்கு கியூபா பிரச்சினையில் 1962 ஆம் ஆண்டு அமெரிக்காவும், ரஷ்யாவும் அணுவாயுதப் போரில் ஈடுபடக்கூடிய நிலைக்கு நெருங்கின. அணுவாயுதங்களைப் பயன்படுத்தினால் ஏற்படக்கூடிய அபாயத்தைப் பற்றித் தெரியுமல்லவா? என்று கிளிங்டன் கேட்டுள்ளார். ஒரு அணுகுண்டை போட்டாலும் போதும்... என்று கிளிங்டன் முடிக்கும் முன் பேரழிவு ஏற்படும் என்று ஷெரீப் முடித்துள்ளார். இச்சந்திப்பின் போது கிளிங்டனின் சிறப்பு உதவியாளர் புரூஸ் ரீடெல்லும் இருந்துள்ளார். பேச்சின் விபரத்தை அவர் கூறியதாக தனது புத்தகத்தில் உசேன் ஹக்கானி தெரிவித்துள்ளார்.



கோடை வெய்யிலில் சென்னையில் தண்ணீருக்காகக் காத்திருக்கும் மக்கள்.

# நேருவைப் பற்றி விமர்சனம்; காங்கிரஸ் கடும் கண்டனம்

(புதுடில்லி)


நேருவை ஆங்கிலேயர் என்று கூறிய ஆர்.எஸ்.எஸ் தலைவர் சுதர்சனுக்கு காங்கிரஸ் கடும் கண்டனம் தெரிவித்தது.

ஆர்.எஸ்.எஸ் தலைவர் சுதர்சனம், லக்னோவில் அளித்த பேட்டியில், இந்திரா காந்தியைத் தவிர மற்ற எந்தப் பிரதமரும் பாகிஸ்தானுக்கு தகுந்த பாடம் கற்பிக்கவில்லை என்று பாராட்டினார். நேருவை ஆங்கிலேயர் என்றும் விமர்சித்தார்.

காங்கிரஸ் தகவல் தொடர்பாளர் ஆனந்த் சர்மா, டில்லியில் நேற்று முன்தினம் இது தொடர்பாக அளித்த பேட்டியில் நேருவைப் பற்றி சுதர்சனம் கூறிய கருத்து ஆட்சேபனைக்குரியது. நவீன இந்தியாவின் சிற்பியே நேருதான். சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட முன்னணித் தலைவர் பெரும் தியாகங்களை செய்து ஆங்கிலேயர்கள் பிடியில் இருந்து தாய்நாட்டை மீட்டவர். ஆங்கிலேயர்களின் சிறையில் அடைபட்டு இருந்தவர். சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்பே இல்லாத அமைப்பின் தலைவர் நேருவைப் பற்றி இப்படிப்பட்ட கருத்தைக் கூறியிருக்கக் கூடாது என்றார்.

இந்திராகாந்தியை பாராட்டியது பற்றி சர்மா கூறுகையில்; நாட்டின் பலம் வாய்ந்த தலைவர்களில் இந்திராகாந்தியும் ஒருவர் என்பது உலகம் அறிந்தது. அவர் உயிர்த்தியாகம் செய்து 21 ஆண்டுகள் ஆகின்றன. இப்போது அவரை ஆர்.எஸ்.எஸ் புகழவேண்டிய தேவையில்லை. 1971 ஆம் ஆண்டில் இந்திய நாட்டின் துர்க்கை என்று இந்திரா பாராட்டப்பட்டார் என்றார்.

# பெற்றோல், டீசல் விலை உயர்வைக் கண்டித்து போராட்டம் நடத்த பாரதியஜனதா கட்சி முடிவு




(சென்னை)

பெற்றோல், டீசல் விலை உயர்வைக் கண்டித்து நாடு தழுவிய அளவில் விரைவில் போராட்டம் நடத்தப்படும் என்று பா.ஜ துணைத்தலைவர் வெங்கையா நாயுடு தெரிவித்தார்.


சென்னையில் நேற்று முன்தினம் நிருபர்களிடம் நாயுடு கூறியதாவது

பெற்றோல், டீசல் விலையை மத்திய அரசு மீண்டும் உயர்த்தியிருப்பது கண்டிக்கத்தக்கது. இந்த விடயத்தில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசும், கம்யூனிஸ்டுகளும் மக்களுக்கு மாபெரும் துரோகம் இழைத்துள்ளன. பெற்றோல், டீசல் விலை உயர்வால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவர். போக்குவரத்து கட்டணம் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும். மின் கட்டண உயர்வு, வறட்சி, மின்பற்றாக்குறை ஆகியவற்றால் ஏற்கனவே அவதிப்பட்டு வரும் விவசாயிகளுக்கு இது மேலும் துன்பத்தைத் தரும்.

பெற்றோல், டீசல் விலை உயர்வின் மூலம் கம்யூனிஸ்டுகளின் சுயரூபம் வெளிச்சத்திற்கு வந்து விட்டது. மக்களுக்கு ஆதரவாக போராடுவது போல் நடிக்கும் கம்யூனிஸ்ட்டுகள், உண்மையில் மத்திய அரசுக்கு ஆதரவாக செயற்படுகின்றனர். மக்கள் மீது உண்மையிலேயே அவர்களுக்கு அக்கறை இருந்தால் பெற்றோல், டீசல் விலை உயர்வை வாபஸ் பெறுவதற்கு மத்திய அரசை வற்புறுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மத்திய அரசின் மக்கள் விரோத போக்கைக் கண்டித்து நாடு தழுவிய அளவில் பா.ஜ சார்பில் போராட்டம் நடத்தப்படும் போராட்ட திகதி விரைவில் அறிவிக்கப்படும்.

தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியிலும் பெற்றோல், டீசல் விலை உயர்த்தப்பட்டது. ஆனால், மக்கள் கடுமையாக பாதிக்கும் வகையில் அவ்வப்போது விலை உயர்த்தப்படவில்லை. இந்த ஆட்சியில் அவ்வப்போது எரிபொருள் விலைகள் உயர்த்தப்பட்டு வருகின்றன என வெங்கையா நாயுடு கூறினார்.



தரகுத்தொகையை உயர்த்தக்கோரி இந்தியா முழுவதும் பெற்றோல் நிரப்பு நிலையங்களில் நேற்று ஒரு நாள் வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது. இதனால் வெறிச்சோடிப்போயுள்ள பெற்றோல் நிரப்பு நிலையங்கள்.



இந்தியாவில் பெற்றோல், டீசல் விலை உயர்வையடுத்து போத்தல்களுடன் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபடும் மக்கள்.

# இந்தியாவின் முதல் "பெண்கள் கட்சி" ஆரம்பம்; ஆக.15 ஆம் திகதி ஆண்கள் அணி அமைப்பு

(திருச்சி)

சுதந்திரத்துக்கு போராடிய ஜான்சிராணி பிறந்தநாளில் 'ஆட்சி மீது விருப்பமே இல்லாத கட்சி, திருச்சியில் நேற்று முன்தினம் உதயமானது. கடையடைப்பு, மறியல், பேரணி என மக்களை பாதிக்கும் எதுவும் நடத்தப்படமாட்டாது என உறுதியளிக்கப்பட்டுள்ளது. இக்கட்சியின் ஆண்கள் அணி வரும் சுதந்திர தினத்தன்று தொடங்கப்படுகின்றது.

திருச்சி உறையூரில் உள்ள ராமர் மடத்தில் இக்கட்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. நாடு சுதந்திரம் அடைந்து 50 ஆண்டு ஆகியும் பெண்ணடிமை, பெண்கள் மீது அதிகரித்துள்ள கொடுமைகளை களைய பெண்களுக்காக தனிக்கட்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் தொகையில் 50 சதவீதம் உள்ள பெண்களுக்கு கிடைக்கக்கூடிய உரிமைகளை பெறவும் நாட்டின் அமைதியை உறுதிப்படுத்தவும் மக்களின் சமூக குடும்ப வாழ்வில் அமைதி நிலவவும், நாடு செழிப்படையவும், மக்களின் முழு சக்தியை திரட்டி நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லவும் இக்கட்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். 'கதவடைப்பு, மறியல், ஊர்வலம், லட்சம் பேர் கூடும் பிரம்மாண்ட மாநாடு, ஆயிரம் வாகன அணிவகுப்பு' என பொதுமக்களை பாதிக்கும் எந்த விடயத்திலும் பெண்கள் கட்சி ஈடுபடாது மாறாக தனித்தனியாக இயங்கும் பெண் இயக்கங்களை ஒன்றிணைத்து ஓரணியாக பெண்கள் உரிமைக்காக இக்கட்சி போராடும் என அவர் தெரிவித்தார்.

தற்போது உள்ள ஆயிரம் பெண் உறுப்பினர்கள் இக்கட்சியின் நிர்வாகிகளை விரைவில் தேர்வு செய்வர்.

முழுக்க முழுக்க பெண்களைக் கொண்ட நிர்வாகக் குழுவினர் தான் வரும் தேர்தலில் யாருக்கு வாக்கு போடுவது என முடிவு செய்வர். அது பற்றி பின்னர் வீடு, வீடாக சென்று பிரச்சாரம் மேற் கொள்வர் என்றார்.

ஏனைய கட்சிகளில் மகளிரணி உள்ளது போல 'இந்திய பெண்கள் கட்சி'யின் ஆண்களணி வரும் ஆகஸ்ட் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்படுகிறது.

# அமரர் பூஜிதா வெற்றிக்கிண்ண கிரிக்கெட்; இறுதிப் போட்டியில் நியூஸ்ரார்–இளந்தாரகை

அமரர் சத்தியதர்சன் பூஜிதா வெற்றிக்கிண்ணத்திற்கான மென்பந்துப்போட்டியின் இறுதிப்போட்டிக்கான அணிகள் தெரிவாகியுள்ளன.

நேற்றுக்காலை ஒன்பது மணியளவில் கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமான இப்போட்டியில்



நியூஸ்ரார் அணி



தோழர்கள் அணி (படம்:சசி)

விசுவமடு தோழர்கள் அணியும், கிளிநொச்சி நியூஸ்ரார் அணியும் போட்டியிட்டன.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தோழர்கள் அணி 15ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கார்த்தீபன் 21 ஓட்டங்களையும், சீலன் 15ஓட்டங்களையும் அணிக்கு அதிகபட்சமாக பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் சுந்தரலிங்கம் இரண்டுவிக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். பதிலுக்கு 85 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய நியூஸ்ரார் அணி 13.4 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் குகனேசன் 22 ஓட்டங்களையும், சுந்தரலிங்கம் 16 ஓட்டங்களையும், நேசன், அருள்ராஜ் ஆட்டமிழக்காமல் 14,12 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் தர்மேந்திரா இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இப்போட்டிக்கு நடுவர்களாக குமார், சுபானந் ஆகியோர் கடமையாற்றினர். (ச)



உழவர் ஒன்றிய அணி



லக்கிஸ்ரார், சந்திரோதயா அணிகள் (படம்:குகன்)

## கால்பந்து இறுதிப்போட்டியில் மோத சந்திரோதயா, உழவர் ஒன்றிய அணிகள்

அமரர் சத்தியதர்சன் பூஜிதா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்துப் போட்டியின் இறுதிப்போட்டிக்கு சந்திரோதயா, உழவர் ஒன்றிய அணிகள் தெரிவாகின.

நேற்று மாலை நடைபெற்ற அரையிறுதிப் போட்டிகளில் ஸ்கந்தா அணியை எதிர்த்தாடிய உழவர் ஒன்றிய அணி 1-0 என்ற கோல் கணக்கிலும் லக்கிஸ்ரார் அணியை எதிர்த்தாடிய சந்திரோதயா அணி 1-0 என்ற கோல் கணக்கிலும் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவாகின.


இறுதிப்போட்டி நாளை மாலை கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறுமென போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (கு)

## லெப்.கேணல் கங்கை அமரனின் நினைவாக மாபெரும் கால்பந்தாட்ட சுற்றுப்போட்டி

மாவீரர் லெப்.கேணல் கங்கை அமரனின் நான்காம் ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு எதிர்வரும் 25ஆம் திகதி மன்னார் பொது விளையாட்டரங்கில் 30 கழகங்கள் பங்கு கொள்ளும் மாபெரும் உதைபந்தாட்டசுற்றுப்போட்டி இடம் பெறவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் மன்னார் மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் நிலான் மேற்கொண்டுள்ளார். (18)


## பீற்றர்சன் நெருக்குதல் கொடுப்பார்



இங்கிலாந்துடனான நட்வெஸ்ட் தொடரில் முதலாவதுபோட்டியில் மூன்று விக்கெட்டுக்களால் தனது அணி தோல்வியடையக் காரணமாக இருந்த இங்கிலாந்தின் கெவின் பீற்றர்சன் (ஆட்டமிழக்காது பெற்ற 91 ஓட்டங்கள் காரணமாக) மைதானத்தையடுத்து அவர் ஆஷஸ் தொடரிலும் நெருக்குதலையளிப்பார் என அவுஸ்திரேலிய அணித்தலைவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.அவர் பெற்ற 91 ஓட்டங்களுடன் ஒப்பிடும்போது ஒருநாள் போட்டிகளில் அவர் 162.25என்ற சராசரியைப் பெற்றுள்ளார்.இங்கிலாந்து அணியின் தேர்வாளரான டேவிட் கிரவ்ணி குறிப்பிடும்போது துடுப்பாட்டத்தில் நல்ல தாக்குதலை நடத்துவதாகவும் களத்தடுப்பிலும் பீற்றர்சன் பிரகாசிப்பதாகத் தெரிவிக்கிறார். இதனால் டெஸ்ட் போட்டியில் அவரை இணைப்பது பற்றி ஆலோசிக்கப்படுவதாகவும் தேர்வாளர் குறிப்பிடுகிறார்.

அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சாளர் ஷேன் வோன் குறிப்பிடும்போது அண்மையில் நடைபெற்ற கவுண்டி போட்டிகளில் ஹம்சயர் அணிக்கு அவர் தலைமை தாங்கிய விதம் பற்றிப் பாராட்டியுள்ளார்.

# 20ஓவர் சுனாமி நலநிதிக் கிரிக்கெட்போட்டி உலக 11 பேர் அணிக்கு ஆறு விக்கெட் வெற்றி



சுனாமி நிவாரண நிதிக்கான 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் ஆசிய 11 பேர் அணி ஆறு விக்கெடடுக்களினால் உலக 11 பேர் அணியிடம் தோல்வி அடைந்துள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி திரட்டுவதற்காக 20 ஓவர் கிரிக்கெட்போட்டி லண்டன் பிரிட் ஓவல் மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்தது. இதில் ராகுல் ராவிட் தலைமையிலான ஆசிய 11 பேர் அணியும், மேற்கிந்தியத்தீவின் பிரைன்லாறா தலைமையிலான உலக 11 பேர் அணியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற ராவிட் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார். அதிரடி வீரர்களான ஜெயசூரிய, சேவாக் ஆட்டத்தைத் தொடக்கினர்

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட சேவாக் ஒரு ஓட்டம் மட்டுமே எடுத்து ஆட்டமிழந்தார். ஐந்து பவுண்டரிகள் விளாசிய ஜெயசூரிய 27 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து வந்த சங்கக்கார (15) அவசரப்பட்டு ஆட்டமிழந்தார். இக்கட்டாக களமிறங்கிய ராவிட் இந்திய அணியைக் காப்பாற்றுவது போல ஆசிய 11 பேர் அணியையும் மீட்டார். பொறுப்புடன் ஆடிய இவர் அரைச்சதம் அடித்தார். ஜெயவர்த்தனா 24, கைப் மூன்று ஓட்டம் எடுத்தனர். ராவிட் 47 பந்தில் 62 ஓட்டங்களுடன் ஹோலியேக் பந்தில் ஆட்டமிழந்தார். ஏனையோர் சொற்ப ஓட்டத்துடன் ஆட்டமிழக்க 19.1 ஓவரில் 157 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. ஆசிய 11 பேர் அணி பந்து வீச்சில் ஹோலியேக் கட்ரிக் சாதனை படைத்தார்.





அடுத்து களமிறங்கிய உலக 11 பேர் அணி தொடக்கத்தில் தடுமாறியது. பிளமிங் 'ஓட்டம் பெறாமலும்,லாரா ஒன்பது, அன்டி பிளவர்15, கெய்ன்ஸ் ஒரு ஓட்டத்துடனும்ஆட்டமிழந்தனர். பின்னர் ஜோடி சேர்ந்த பிளிவெட், ஸ்டைரிஸ் ஜோடி அபார மாக ஆடி அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றது. இறுதியில் உலக 11 பேர் அணி 18.1 ஓவரில் நான்கு விக்கெட் இழப்புக்கு 161 ஓட்டம் எடுத்து வெற்றி பெற்றது. பிளி வெட் 91,ஸ்டைரிஸ் 39 ஓட்டங்களுடன் ஆட்ட மிழக்காமல் இருந்தனர்.

# பிரேசில் அதிர்ச்சி தோல்வி அரைவிறுதியில் மெக்சிக்கோ

காண்படரேஷன் தொடரில் ஐந்துமுறை உலக சம்பியனான பிரேசில் அணி, மெக்சிக் கோவிடம் 0-1 என்ற கோல் கணக்கில் அதிர்ச்சி தோல்வியடைந்தது.மகத்தான வெற்றி பெற்ற மெக்சிக்கோ அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

ஜேர்மனியில் கான்படரேஷன் கோப்பை கால்பந்துத் தொடர் நடக்கிறது. ஆர்ஜென்டினா, கிரீஸ், பிரேசில் உட்பட உலகின் முன்னணி எட்டு அணிகள் மோதுகின்றன. கடந்த ஞாயிறு ஹனோவரில் நடந்த லீக் போட்டியில் 'பி' பிரிவில் இடம்பெற்றுள்ள பிரேசில், மெக்சிக்கோ அணிகள் மோதின.

முதல் பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்க கடுமையாகப் போராடின. 29ஆவது நிமிடத்தில் பிரேசிலின் ரோகி [illegible]னியர் முரட்டுத்[illegible]மாக தடுக்க, மெக்சிக்கோ அணிக்கு [illegible] வாய்ப்பு வழங்கப்பட்டது.ஜாரட் போர்க்கெட்டி அடிக்க முற்பட்டார். அப்போது மெக்சிக்கோ வீரர் இடையூறு செய்ததாகக் கூறி நடுவர் ராபர்ட்டோ ரோசட்டி நிறுத்தினார். இரண்டாவது முறையாக அடித்தபோது பந்து கோல் கம்பத்தில் பட்டு வெளியேறியது. அப்பாடா... தப்பித்தோம் என்று பிரேசில் நினைத்தது. ஆனால் நடுவர் விடவில்லை. கோல்காப்பாளர், டிடா கோல் லைனில் இருந்து விலகிச்சென்றதாகக்கூறி மீண்டும் வாய்ப்பளித்தார் இப் போது மூன்றாவது முறையாக போர்க்கெட்டி அடித்தார். இம்முறை பந்தை டிடா அபாரமாகத் தடுக்க, மெக்சிக்கோ ரசிகர்கள் மிகுந்த ஏமாற்றமடைந்தனர். இதற்குப் பின் பிரேசிலின் ரொனால்டினோ,ராபின்கோ, அட்ரியானோ துடிப்பாகச் செயற்பட்டபோதும் கோல் அடிக்க இயலவில்லை.அணியில் ரொனால்டோ இல்லாத குறை முழுமையாக உணரப்பட்டது.

இரண்டாவது பாதியில் மெக்சிக்கோ வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினர். 59 ஆவது நிமிடத்தில் இந்த அணியின் போர்க்கெட்டி தலையால் முட்டி அற்புத கோல் அடித்தார். பெனால்டி வாய்ப்பில் கோட்டைவிட்ட இவர், சிறப்பாக செயற்பட்டு அணியின் நாயகனானார். இதற்குப் பதிலடி கொடுக்கத் திணறிய பிரேசில் தோல்வியைத் தழுவியது. மெக்சிக்கோ அணி அரையிறுதிக்கு முன்னேறியது.







மெக்சிக்கோவின் வெற்றிக்கோல்



பிரேசிலின் நிராகரிக்கப்பட்ட கோல்



**சிந்தனைக்கு**

அறப்போரிலும் சரி, ஆயுதப்போரிலும் சரி எமது விடுதலைப்போர் உலக சாதனைகளைப்படைத்து வருகின்றது.; மனித ஈகையின் சிகரத்தை எட்டியிருக்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 22-06-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## சனநாயகத் தத்துவத்திற்கு மாறாக...!

இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிகவும் நெருக்கடியானதொரு காலகட்டத்தில் நாடு உள்ளது. சனநாயகத்தின் பெயரில் ஆட்சி நடைபெறும் நாட்டில் சிறுபான்மை அரசாங்கம் ஒன்று–அதாவது சனநாயக ஆட்சி என்ற தத்துவத்திற்கு மாறான வகையிலான ஆட்சி நிலவும் சூழ்நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது.

தற்பொழுது ஆட்சியில் உள்ள சிறுபான்மை அரசாங்கம் எவ்வளவு காலத்திற்கு ஆட்சியில் இருக்கும் என எதிர்வு கூறமுடியாததொரு நிலையே தற்பொழுது காணப்படுகின்றது. அதாவது எதிர்க்கட்சி வரிசையில்அதிக எண்ணிக்கையான பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கையில் ஆட்சி, அதிகாரம் என்பது சிறுபான்மை அங்கத்தவர்களைக் கொண்ட கட்சியிடம் உள்ளது. ஆட்சி அதிகாரம் எப்பொழுது பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட கட்சியிடம் மாறும் அதாவது சனநாயகத்தின் அடிப்படைத்தத்துவத்திற்கு ஏற்ப மாறும் என்பதே இன்றுள்ள வினாவாகும்.

ஆனால் சிறுபான்மை அரசாங்கம் தனது ஆட்சி அதிகாரத்தைத்தொடர அன்றி தக்கவைக்கக் கூடியதானதொரு சூழ்நிலையே தற்பொழுது உள்ளது. ஒருபுறத்தில் சனாதிபதி இச்சிறுபான்மை அரசாங்கத்தின் தலைவியாக இருப்பது, அதன் பலமாகும். இரண்டாவது எதிர்க்கட்சி வரிசையில் பல கட்சிகள் இருப்பதும், அவர்களிடம் காணப்படும் ஒற்றுமையின்மையும் தேர்தலை உடன் எதிர்கொள்ள அவை விரும்பாமையும் சிறுபான்மை அரசாங்கத்திற்கு பாதுகாப்பானதாகவுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி தலைவராக இருப்பதன் மூலம் சிறுபான்மை அரசாங்கம் ஆயினும் அது பலப்படுவதற்கு வரப்புக்கள் உள்ளது. ஒரு புறத்தில் இவ்அரசாங்கம் கவிழ்க்கப்படுவதை சனாதிபதியால் தடுத்து நிறுத்த முடியும் என்பதோடு மறுபுறத்தில் பாராளுமன்றத்தை சில மாதங்களுக்கு ஒத்தி வைத்து ஆட்சியைக் காப்பாற்றவும் முடியும்.

இதேசமயம் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சி பொதுத் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ள முன்னர் சனாதிபதித் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளவே விரும்புகின்றது. அதாவது சனாதிபதியாக சந்திரிகா குமாரதுங்க அதிகாரத்தில் இருக்கையில் பொதுத் தேர்தல் ஒன்று இடம்பெறுமானால் அது தமக்குச் சாதகமாக அமைய மாட்டாது என அது கருதுகிறது. ஏனெனில் சனாதிபதி சந்திரிகா அதிகாரத்தைத் தமக்கு எதிராகப் பயன்படுத்துவர் என அது நம்புகின்றது.

இதேவேளை ஜே.வி.பியோ தற்போதைய சிறுபான்மை அரசாங்கத்தைக் கவிழ்த்து புதிய அரசாங்கம் ஒன்றை ஐ.தே கட்சியின் தலைமையிலாயினும் அமைக்க விரும்புகின்றதே ஒழிய பொதுத் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ள அது தயாராக இருப்பதாக இல்லை. ஏனெனில் வலுவானதொரு அரசியல் கூட்டணியின்றி தனித்தோ அன்றிப் பலவீனமான கூட்டணியுடனோ தேர்தலைச் சந்திப்பின் தற்போதைய பாராளுமன்ற ஆசனங்கள் அளவில் கூடப் பெற்றுக்கொள்வது சிரமமானகாரியம் என்பது அதனால் விளங்கிக் கொள்ளப்பட்டதொன்றாகவே உள்ளது.

அது மட்டுமன்றித் தனித்துப் போட்டியிடும் நிலை ஒன்றுவரின் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமக்கு எதிராக தமதுஅதிகாரப் பலத்தைப் பல்வேறு வகையிலும் பயன்படுத்தலாம் எனவும் ஜே.வி.பி கருதுகிறது. இதற்காக சந்திரிகா கடந்த கால ஜே.வி.பி யின் வரலாற்றைப் புரட்டவும். ஐ.மசு முன்னணி ஆட்சிக் கால ஜே.வி.பி அமைச்சர்களின் கோப்புக்களைப் புரட்டவும் அவற்றின் அடிப்படையில் நெருக்கடி கொடுக்கவும் கூடும் எனவும் எதிர் பார்க்கின்றது.

ஆகையினால் விரும்பியோ விருப்பமின்றியோ பொதுத்தேர்தல் ஒன்றை உடன் சந்திக்க எதிர்க்கட்சிகள் விரும்புவதாக இல்லை என்றே கூறலாம். ஆகையினால் சனாதிபதி சந்திரிகாவின் விருப்பு வெறுப்புக்களே பெரும்பாலும் அடுத்த பொதுத் தேர்தலை தீர்மானிக்கும் என எதிர்பார்க்கலாம்.

சில வேளைகளில் அடுத்த வரவு–செலவு திட்டகாலத்தில் சிறுபான்மை அரசாங்கத்திற்குப் பெரும் நெருக்கடி ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு. அதாவது வரவு– செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதில் சிரமம் ஏற்படலாம். ஆயினும் ஐ.தே கட்சியின் தீர்மானமே இதில் முக்கிய பங்களிப்பு வகிப்பதாக இருக்கும்.

ஆயினும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் வரவு–செலவுத் திட்டம் வரையில் பாராளுமன்றத்தை நடத்திச்சென்றுவிட்டு மீண்டும் பாராளுமன்றத்தை ஒத்திவைத்து மேலும் சில மாதங்களுக்கு அரசாங்கத்தின் ஆயுட்காலத்தை நீடித்துச் செல்லமுடியும். சிலவேளை தேர்தலைக் கூட சனாதிபதி சந்திரிகா விரும்பக்கூடும்.

இதற்கு மாறாக நிலைமை எவ்வாறாயினும் ஐக்கிய தேசியக் கட்சியின் தீர்மானங்கள் அடுத்த நவம்பரின் பின்னர் அரசாங்கத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் முக்கியத்துவம் மிக்கதாக இருக்கும். ஏனெனில் முழு அளவில் சிறுபான்மை அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு அனுமதிப்பதன் மூலம் சில நெருக்கடிகளுக்கு ஐ.தே.கவும் முகம் கொடுக்க வேண்டியதாகிவிடும்.

# ஜே.வி.பி சகோதரர்களின் செயற்பாடுகளால் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாதிருந்தது.

**-அமைச்சர் அநுராபண்டார நாயக்க ஆதங்கம்**

(கொழும்பு)

ஜே.வி.பி. சகோதரர்களின் செயற்பாடுகளினால் கடந்த காலங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்த முடியாது போனதாக சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,கடந்த காலங்களில் ஜே.வி.பி. சகோதரர்களின் செயற்பாடுகளினால் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் மறுசீரமைப்புகளை மேற்கொள்ள முடியாதிருந்தது, தற்போது அந்தத் தடை நீங்கியிருப்பதனால் நாட்டை எவ்வித பிரச்சினையும் இன்றி முன் கொண்டு செல்ல முடியும்.

ஜே.வி.பி. அரசாங்கத்தை விட்டு விலகிய விடயம் சம்பந்தமாக சனாதிபதியுடன் விரிவான பேச்சு வார்த்தைகளை மேற்கொண்ட பின்னரேதான் அதுபற்றி எதுவும் கூற முடியும்.

ஜே.வி.பியினர் மீண்டும் எம்மிடம் இணைய வருவார்களாயின் பிரச்சினையில்லை. ஆனால் அப்படி அவர்கள் வந்தாலும் எமது நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே அவர்கள் செயற்பட வேண்டும். ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் முக்கிய பிரச்சினை பசி, பட்டினி. அதனைத்தீர்க்க நாம் கண்டிப்பாக முன்வர வேண்டும்.

அதற்கென எமக்கு பெருமளவு உதவி கிடைத்துள்ளன. அவற்றை நாம் விநியோகிக்க வேண்டும். நாம் எதிர்காலத்தில் பல அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்த வேண்டியுள்ளது.

பாதைகளை திருத்த வேண்டும். மின்விநியோகம் வழங்க வேண்டும். சரித்திரத்தில் முதல் தடவையாக எமக்கு இவற்றிற்கென பெருமளவு உதவித்தொகைகள் கிடைத்து வருகின்றன.

அதனை நாட்டிலுள்ள அனைத்த மக்களினதும் மனம்குளிரும் வகையில் பயன்படுத்தவேண்டும். எமதுபொருளாதார சீர்திருத்தங்களுக்கு மக்கள் விடுதலை முன்னணியினரே தடங்கலாக இருந்தனர். இப்போது அந்தத் தடை இல்லை என்றார்.

# எம்பிலிப்பிட்டிய நகரில் தீவிபத்து 11 வர்த்தக நிலையங்கள் தீக்கிரை

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டிய நகரில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட தீவிபத்தில் பதினொரு வர்த்தக நிலையங்கள் தீக்கிரையாகியுள்ளன. விபத்தின் காரணமாக மூன்று விடுதிகள், பழவகைகளை விற்பனை செய்யும் ஆறு கடைகள், அலங்காரப்பொருட்களை விற்பனை செய்யும் இரண்டு கடைகள் என்பன முற்றாக அழிந்துள்ளன.

மின்சார சபையினதும்,செவனகல சீனித்தொழிற்சாலையினதும் தீ அணைப்புப்பிரிவினர் தீ பரவாது தடுத்துள்ளனர். இந்தத்தீயினால் சுமார் பன்னிரண்டு இலட்சம் ரூபா வரை இழப்பு ஏற்பட்டுள்ளதாக எம்பிலிப்பிட்டிய பொலிஸ் உத்தியோகத்தர் அசோக விஜயரட்ண அறிவித்துள்ளார்.

# முதுகெலும்புள்ள அமைச்சர் இன்மையால் சனாதிபதிக்கு ஆலோசனை கிடைக்கவில்லை,

**ஜாதிகஹெலஉறுமய தலைவர் கூறுகின்றார்.**

முதுகெலும்புள்ள அமைச்சர் ஒருவர் இருந்தால் பொதுக்கட்டமைப்பினால் ஏற்படும் விளைவுகள் குறித்து சனாதிபதிக்கு விளக்கிக் கூறியிருப்பார் என ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவல மேதானந்ததேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டைப்பற்றியும், இனத்தைப் பற்றியும் அக்கறை இருப்பவர்கள் ஜாதிக ஹெல உறுமயவுடன் சேர்ந்து நாட்டைப் பிரிக்கும் அரசாங்கத்தின் பொதுக்கட்டமைப்பு யோசனையைத் தோற்கடித்து நாட்டையும், இனத்தையும், மதத்தையும் காக்க முன்வருமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

நாட்டை அழிக்கும் பொதுக் கட்டமைப்பு வேண்டாம் என்ற தலைப்பில் கிரிபத்கொடவில் இடம் பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

அங்கு மேலும் உரையாற்றிய அவர் கூறியதாவது:

பக்தர்கள் வழங்கும் தானத்தைப் பெற்றுக்கொண்டு நாம் விகாரைகளுக்குள் இருக்கலாம். நாம் அப்படி இருந்தால் நாடும், இனமும் அழிந்து போய்விடும். நாடும், இனமும், மதமும் அழிந்துபோகையில் அது பற்றி அக்கறை உள்ளவர்களால் வெறுமனே பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

சமாதானம் என்று கூறிக்கொண்டு நாட்டை அழித்து விடுதலைப் புலிகளைப் பராமரிப்பது இந்த அரசாங்கம் வந்த பின்னராவது நிறுத்தப்படுமென எதிர்பார்த்தோம். எமது புலனாய்வுத்துறையினர். படுகொலை செய்யப்படுகின்றனர்.

எமது தலைவர்கள் அதற்கு ஆணைக்குழுக்களை நியமிக்கின்றனர். படுகொலை செய்த பின்னர் ஆணைக்குழுக்கள் எதற்கு? ரணில் விக்கிரமசிங்க நிறுத்திய இடத்திலிருந்து கூட்டமைப்பு அரசாங்கம் விடுதலைப் புலிகளைப் பராமரிக்கிறது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் விடுதலைப்புலிகள் அனைத்தையும் இழந்தனர். அதனை எமது தலைவர்கள் உணர்கின்றனரில்லை.புலி இன்று எழுந்து நிற்கின்றது. எமது முப்படை பலமிழந்துள்ளது. ஆயுதங்கள் துருப்பிடிக்கின்றன.

விடுதலைப்புலிகள் நாட்டின் எல்லா இடங்களிலும் ஊடுருவியுள்ளனர். தனக்குப் பாதுகாப்பில்லை என சனாதிபதி கூறுகிறார். எமது பொலிசாரிடம் இருக்கும் துப்பாக்கிகளை கீழே அடித்தாலும் அவை வெடிப்பதில்லை. விடுதலைப்புலிகள் பொதுக்கட்டமைப்பைக் கேட்கவில்லை. எமது தலைவர்களே அதனைச் செய்தனர். இப்போது எம்மைச் சமாதானம் செய்ய வருகின்றனர்.

இந்த நாடு பிளவுபடுவதனை எதிர்க்கும் எம்மால் இந்தப் பொதுக் கட்டமைப்பிற்கு உடன்பட முடியுமா? இந்த ஆவணம் சட்டவிரோதம் என்பதால் இதனைக் கொண்டு வருபவர்களைக் கைது செய்ய வேண்டும். இன்று எதிர்க்கட்சியில் இருக்கும் எவராலும் இது தொடர்பான எதிர்ப்பினை வெளிப்படுத்த முடியாதா? குறைந்த பட்சம் பிரதமராவது வாய்? திறந்து இது பற்றி கூறமுடியாதா எனவும் எல்லாவல மேதானந்த தேரர் அங்கு கேள்வி எழுப்பியுள்ளார்.

# பொதுத்தேர்தலுக்கு தயாராக சனாதிபதி அவசர உத்தரவு!

(கொழும்பு)

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி காரணமாக திடீரென பொதுத்தேர்தல்கள் நடைபெறலாம். எனவும் ஆனபடியால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற அங்கத்தவர்கள் மற்றும் அமைச்சர்கள் சகல கட்சி அங்கத்தவர்கள், தொண்டர்கள் அனைவரையும் தயாராக இருக்கும்படி சனாதிபதி கட்டளையிட்டுள்ளார். என கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தை தொடர்ந்தும் நடத்துவதற்கு அதிக பெரும்பான்மை இல்லாவிடில் அரசாங்கத்தைக் கலைப்பதைத்தவிர வேறு எதுவும் செய்யமுடியாதென சனாதிபதி தெரிவித்துள்ளார். என திவஜன தெரிவித்துள்ளது.

# 15 ஆயிரம் கிணறுகள் சுனாமியால் மாசடைவு

டிசெம்பர் 26 ஆம் திகதி இலங்கையைத் தாக்கிய சுனாமி கடல் சீற்றம் பாரிய இடிபாடுகளை ஏற்படுத்தியதுடன் குடிநீர்நிலைகளை மாசுபடுத்தியுள்ளது.என ஐ.நா.தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட ஆய்வறிக்கை மூலமே இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது. 110 கோடி இறாத்தல் நிறை கொண்ட இடிபாடுகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கும் இந்த அறிக்கை மேலும் 15 ஆயிரம் கிணறுகளை மாசடையச் செய்திருப்பதாகவும் மதிப்பிட்டுள்ளது.

பவளப்பாறைகள் உள்ள கடற்கரைப் பிரதேசங்களில், ஆழிப்பேரலையின் தாக்கம் ஏனைய பிரதேசங்களை விட குறைவாக இருந்ததாக இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பாதிப்படைந்த இடங்களை மீண்டும் கட்டி எழுப்புவதற்கு ஐக்கிய நாடுகளின் இந்த ஆய்வறிக்கை பெரிதும் உதவும் என நம்பப்படுகின்றது. (32)

# தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைமை தீவிரம்!

## சு.க.வும் களமிறங்கத் தயார்

(கொழும்பு)

தென்னிலங்கையின் பரபரப்பான அரசியல் சூழலில் சனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத்தேர்தல் ஆகியவற்றுக்கும் கட்சிகள் தயாராகி வருகின்றன.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இந்த வாரம் தேர்தல் தொடர்பான தனது பிரச்சாரப் பயணங்களைத் தொடங்குகிறது. புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் கட்சி நிர்வாகிகளை அறிமுகப்படுத்துகிற வகையில் சுவரொட்டி பரப்புரைகளை அக் கட்சி மேற்கொள்ளவுள்ளது.

அதேபோல் ஐ.தே.க தலைவரான ரணில் விக்கிரமசிங்க, சிறிலங்காவின் பல்வேறு பகுதிகளுக்கும் கடந்த இரு மாத காலமாகச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வருகிறார்.

இந்தப் பயணத்தில் பல்வேறு பொதுக்கூட்டங்களில் ரணில் பங்கேற்று வருவதோடு கடந்த இரண்டு நாட்களாக அம்பாறைப் பிரதேசத்தில் பிரச்சாரப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

ரணிலின் இந்தப் பிரச்சாரப் பயணம் குக்கிராமங்களைத்தொடும் வகையிலும் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்த நகரப் பகுதிகளையும் மையமாகக் கொண்டு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு இறுதிக்குள் சனாதிபதித் தேர்தலை நடத்திவிட வேண்டும் என்ற நோக்கோடு ஐ.தே. க. காய்களை நகர்த்துகிறது. ஜூலை இரண்டாம் திகதி பிரமாண்டமான பேரணி ஒன்றையும் ரணில் கட்சி நடத்தத்திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்படவுள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் தனக்கான ஆதரவுத்தளத்தை உருவாக்கும் வகையில் பல்வேறு கட்சியினருடன் பேச்சுக்களை நடத்தி வருகிறார்

எந்தச் சூழ்நிலையிலும் தேர்தலை எதிர்கொள்வது குறித்து அண்மையில் மகிந்த ராஜபக்ஷ தமது அமைச்சரவைச் சகாக்களுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

# மின்விநியோகத்திட்டம் புதுக்குடியிருப்பில் ஆரம்பம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்புக்கான மின்விநியோக ஆரம்ப நிகழ்வு நேற்றுப்பகல் 12.00 மணிக்குப் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் செ. தயானந்த தலைமையில் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதியில் உள்ள ஐயனார் கோவிலடியில் புதிதாக இலங்கை மின்சாரசபையினரால் அமைக்கப்பட்ட கட்டடத்தில் வைக்கப்பட்ட மின்பிறப்பாக்கிமூலம் புதுக்குடியிருப்புக்கான மின்விநியோகம் இடம்பெறுகின்றது. வடமாகாணத்துக்கான பிரதம பொறியியலாளர் வி.சண்முகநாதன் சம்பிரதாயபூர்வமாக மின்பிறப்பாக்கியை இயக்கி மின்விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேசப் பொறுப்பாளர் பிறையாளன், வவுனியா மின் பொறியியலாளர் பிரபாகரன், யாழ். உதவிப் பொறியியலாளர் த. சிவானந்தராசா,மின் அத்தியட்சகர் ந.சிதம்பரநாதன்,உதவிப் பொறியியலாளர் விஜயசிறி மற்றும் கிராம அலுவலர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

உடன் இருநூறு மின் இணைப்புக்கள் மேற்கொள்வதாகவும், தொடர்ந்து முந்நூறு மின் இணைப்புக்கள் மேற்கொள்ளவுள்ளதெனவும்., இம் மின்பிறப்பாக்கி மூலம் ஐந்நூறு மின் இணைப்புக்கள் மேற்கொள்ளலாம் எனவும் காலக்கிரமத்தில் தொடர்ந்து மின் இணைப்புக்கள் இடம்பெறும் எனவும் பிரதம பொறியியலாளர் தெரிவித்தார்.

இவ்மின்விநியோகம் காலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி காலை 6.30 மணிக்கு நிறுத்தப்பட்டு மீண்டும் காலை 9.30 மணிக்கு ஆரம்பித்து 1.30 மணிக்கு நிறுத்தி மீண்டும் மாலை 6.00 மணிக்கு ஆரம்பித்து இரவு 10.00 மணிக்கு நிறைவுபெறும். இந்தநேர ஒழுங்கிலேயே மின்விநியோகம் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பகட்ட இவ் மின்விநியோகமானது புதுக்குடியிருப்பின் குறிப்பிட்ட சில பகுதிக்கு மட்டுமே இடம்பெறுகின்றது. (08)

# பொதுக்கட்டமைப்பை எதிர்த்து பிக்குகள் தீவிரமாகப் போராடுவர்

## - தம்பற அமில தேரர் எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்கம் தொடர்ந்தும் பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தை முன்னெடுத்துச் செல்லமுனையும் பட்சத்தில், தமது எதிர் போராட்டங்களை முனைப்புடன் எடுத்துச்செல்லப் போவதாக ஜே.வி.பி.யினருக்கு ஆதரவு வழங்கிவரும், பௌத்தகுருமார் தெரிவித்துள்ளனர்.

தேசிய பிக்கு முன்னணியின் தலைவர் தம்பற அமில தேரர், கண்டியில் ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றும் பொழுதே, இந்தக் கருத்தை வெளிபடுத்தினார்.பொதுக்கட்டமைப்பை ஸ்தாபிப்பதன் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகளை அரசாங்கம் அங்கீகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முனைவதனால், தமது போராட்டத்தை மேலும் விஸ்த்தரிக்க முடிவு செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.அதேவேளை, முன்னர் இந்த பௌத்த துறவி கொழும்பில் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை ஆரம்பித்து, சனாதிபதியின் வேண்டுகோளுக்கு இணங்க கைவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (32)

# பொதுக்கட்டமைப்பு வாய்ப்பு நழுவியதால் முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகள் அதிருப்தி

உத்தேசப் பொதுக்கட்டமைப்பில் மூன்றாம் தரப்பினராக கைச்சாத்திடும் வாய்ப்பு முஸ்லிம்களுக்குக் கிடைக்காமை குறித்து அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர்.நேற்று முன்தினம் திங்கட்கிழமை சனாதிபதி மாளிகையில் குறிப்பிட்ட சில அமைச்சர்களைச் சனாதிபதி சந்திரிகா சந்தித்துப் பொதுக்கட்டமைப்பு விவகாரம் குறித்துக் கலந்துரையாடியிருந்தார். இதில் முஸ்லிம் தரப்பினர் தனியே கைச்சாத்திடும் வாய்ப்பு இல்லை எனத் தெரிவிக்கப் பட்டிருந்தது.

சனாதிபதியுடனான சந்திப்பையடுத்து அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் கட்சி உறுப்பினர்கள் அமைச்சர் பேரியல் அஷ்ரப்பின் இல்லத்தில் கூடி இந்த விடயம் தொடர்பாக ஆராய்ந்துள்ளனர். இதன் போது மீண்டும் சனாதிபதியைச் சந்தித்து இந்த விடயம் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடுவதென தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில் நேற்றிரவு சந்திப்பு இடம்பெற்றது

அதேநேரம் தேசிய ஐக்கிய முன்னணி உறுப்பினர் ஹிஸ்புல்லா தலைமையிலான குழுவொன்று நேற்று முன்தினம் அமைச்சர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்துக் கலந்துரையாடியதாகத் தெரியவருகிறது.

# நீரிழிவு நோய் சம்பந்தமான விசேட மருத்துவ சிகிச்சை

ஐக்கிய இராட்சியத்தில் இருந்து வருகை தந்திருக்கும் நீரிழிவு நோய் சம்பந்தமான வைத்தியர்கள் நீரிழிவு நோய் சம்பந்தமான சிகிச்சைகளையும், ஆலோசனைகளையும்,விசேட இரத்தப் பரிசோதனைகளையும் நடத்தவுள்ளார்கள். பயன் பெறவிரும்புவோர் கிளிநொச்சியிலுள்ள டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரையான நாட்களில் காலை 8.00மணி தொடக்கம் மாலை 3.00 மணிவரை சிகிச்சைகள் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# படகு மீள்கட்டுமான நிலையம் முல்லையில் இன்று திறந்துவைப்பு

(முல்லைத்தீவு)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் முல்லைத்தீவில் அமைக்கப்பட்ட மீள்கட்டுமான படகு உற்பத்தி நிலையம் இன்று திறக்கப்படவுள்ளதாக முல்லை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக சுனாமி கட்டமைப்புப் பொறுப் பாளர் தெரிவித்துள்ளார்.

இந் நிகழ்வு பிற்பகல் 3.00மணியளவில் இடம்பெறவுள்ளது முல்லைத்தீவில் சுனாமியினால் அழிக்கப்பட்டபடகுகளை புனமை [illegible]க்களுக்கு வழங்குவதற்காகவே இப்படகு கட்டுமான உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (20)

### பொதுக்...

திங்கட்கிழமை நடைபெற்றது. மூன்றாவது ஒரு நாள் உண்ணாவிரதம் இன்று புதன்கிழமை காலை முதல் மாலை வரை உப்புவெளி, மூன்றாம் கட்டைச்சந்தியில் நடைபெறும். (25)

# கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசெயலகம்; பிரதேசசபை கட்டடங்கள் திறந்துவைப்பு



(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி,கரைச்சி பிரதேச செயலகம், மற்றும் கரைச்சி பிரதேச சபை என்பவற்றிற்கான புதிய கட்டடத்திறப்பு விழா நிகழ்வுகள் நேற்று இடம்ற்றென. இதில் கிளி மாவட்ட அரச அதிபர் கலந்து கொண்டு வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

கரைச்சிப் பிரதேச செயலக புதிய இரண்டு மாடிக் கட்டடத்திறப்புவிழா நேற்றுப்பகல் 11.00 மணிக்குக் கரைச்சிப் பிரதேசசெயலர் செல்வி க.சுலோஜினி தலைமையில் நடைபெற்றது.

பொதுச்சுடர் மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினைக் கிளி.மாவட்ட நிர்வாக சேவைத் துணைப்பொறுப்பாளர் திருமதி ர.ராதை ஏற்றிவைக்க, கரைச்சிப்பிரதேச செயலகக்கொடியினை கரைச்சிப் பிரதேச செயலர் ஏற்றிவைத்தார். அகவணக்கத்தினைத் தொடர்ந்து பிரதேச செயலகப் பெயர்ப் பலகையினைக் கிளி.மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் மு.தயாகுணரட்ணசிங்கம் திரைநீக்கம் செய்துவைக்க கரைச்சிப் பிரதேச செயலகப் புதிய கட்டடத்தினை கிளி.மாவட்ட அரச அதிபர் சம்பிரதாயபூர்வமாக நாடாவினைவெட்டித் திறந்துவைத்தார். கிராமசேவை அலுவலகர் சு. பசுபதிப்பிள்ளை நன்றியுரைவழங்கினார்.

பிரதேச சபை கட்டடத்திறப்புவிழா நிகழ்வு கரைச்சிப் பிரதேசசபை விசேடஆணையாளர் பொன் நித்தியானந்தம் தலைமையில் நண்பகல் 12.30 மணிக்கு நடைபெற்றது மேற்படி திறப்புவிழா நிகழ்வில் பொதுச்சுடரினை கிளி. மாவட்ட நிர்வாகசேவை துணைப்பொறுப்பாளர் திருமதி ர.ராதை ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக் கொடியினை கிளி.மாவட்ட அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் அருள் ஏற்றிவைக்க பிரதேசசபைக் கொடியினை பிரதேச சபை விசேட ஆணையாளர் ஏற்றிவைத்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து பெயர்ப்பலகையினைக் கிளி.மாவட்ட நிர்வாகசேவைத் துணைப்பொறுப்பாளர் திரைநீக்கம் செய்துவைக்க, பிரதேச சபைக்கான புதிய இரண்டு மாடிக் கட்டடத்தினை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் சம்பிரதாயபூர்வமாக நாடாவிணைவெட்டி திறந்து வைத்தார்.மேற்படி இரு நிகழ்வுகளிலும் உதவி அரச




அதிபர் தலைமைப்பீடம் செல்வி வே. ஜெயராணி, கிளி. கந்தசுவாமி ஆலய பிரதமகுரு இரத்தினேஸ்வரக் குருக்கள் , அருட்தந்தை தேவசகாயம் அடிகள் மற்றும் அரச அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத் தக்கது. (சோ)

### வாழை...

விடுதலைப் புலிகளின் அலுவலகம் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பமுயன்றவர் என்பது படையினருக்குத் தெரியவந்ததாகவும் சமாளிக்கமுடியாத நிலையில் காயமடைந்தவரை உடனடியாக படையினர் தம்முடன் கொண்டு சென்றுவிட்டதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

### பொதுக்கட்டமைப்பிற்கான...

இச்சந்திப்பில் நோர்வேயின் பிரதி வெளியுறவு அமைச்சருடன் நோர்வேயின் தூதர் கான்ஸ்பிரஸ்கர், ஏனைய நோர்வே அதிகாரிகள் மற்றும் சிறிலங்கா அரசாங்கத்தரப்பில் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்ததனபால, வெளிநாட்டுச் செயலர் எச்.எம்.ஜீ. எஸ். பலிக்காகர,கரிம் பீரிஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும் சிறிலங்கா நிதியமைச்சர் சரத்அமுனுகமவையும் விதார் ஹெல்கேசன் சந்தித்துப் பேசியுள்ளார்.

### ஆழிப்பேரலை...

இதேவேளை, பாராளுமன்றில் இதனைச் சட்டமூலமாக சமர்ப்பிக்காமல் அறிக்கையாக வாசிப்பதற்கு அரசாங்கத் தரப்பு ஆலோசித்துள்ளதாக மற்றுமொரு தகவல் வெளியாகியுள்ளது. (32)

### மன்னம்பிட்டி...

வாகனங்களை நிறுத்தி இந்தக் கொள்ளையை அடித்துள்ளார்கள். இவர்கள் தமிழ்மொழியில் அரைகுறையாகவும் சிங்களத்தில் சரளமாகப்பேசியதாகவும் பயணிகள் தெரிவித்துள்ளனர்.

மன்னம்பிட்டி பொலிஸ் சோதனைச் சாவடியில் இதுபற்றி முறையிட்டபோதிலும் அதனைக் கவனத்தில் எடுக்காதபொலிசார் செவனப்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் முறையிடுமாறு கூறினர். சேவனப்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் முறையிட்டபோதிலும் உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் இந்தப் பயணிகள் தெரிவித்தனர்.

### பயணிகள்...

இது பற்றி மேலும் தெரிய வருகையில் நயினாதீவிலிருந்து திரும்பிக்கொண்டிருந்த பக்தர்களைக் குறிகாட்டுவான் இறங்குதுறையிலிருந்து ஏற்றிய வடபிராந்திய போக்குவரத்துச்சபை பேருந்தொன்று புங்குடுதீவு ஊடாக யாழ்.திரும்பியுள்ளது. அவ்வேளையில் குறிகாட்டுவான்-வேலணை துறையூருக்கான கடலினூடாகச் செல்லும் பாதையில் பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்தவேளை கடலினுள் வீழ்ந்துள்ளது.

உடனடியாக அப்பகுதிக்கு விரைந்த செஞ்சிலுவைச்சங்க பணியாளர்கள் மற்றும் திலீபன் மருத்துவமனைப் பணியாளர்கள் காயப்பட்டோரை மீட்டெடுத்தனர். படுகாயடைந்தவர்கள் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டனர். (27)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது